வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 23.12.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 14 | பக்கங்கள் : 16




# ஐ. எம். எவ். கடன் தாமதமாக இலங்கைதான் காரணமாம்!

கொழும்பு, டிசெம்பர் 23

**கடன் மறுசீரமைப்பு தொடர்பாக கடன் அளித்த நாடுகளிடம் இதுவரை முறைப்படி அல்லது எழுத்துபூர்வமாக கடன் மறுசீரமைப்பு குறித்து எந்த உறுதிப்படுத்தலையும் இலங்கை வழங்கவில்லை. இதுதான் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது - என்று கடன் மறுசீரமைப்பு பேச்சில் நேரடியாக ஈடுபட்டுள்ள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் 290 கோடி டொலர் கடன் இழுத்தடிக்கப்படுவதற்கு சீனாவோ அல்லது இந்தியாவோ காரணம் இல்லை. இரு தரப்பு கடன் வழங்குநர்கள் கூடுதல் தகவல் மற்றும் தெளிவுபடுத்தலை கேட்டதால் தான் இந்தத் தாமதம் என்று கூற முடியாது. இலங்கைக்கு உதவுவதற்கு பல நாடுகளும் தயாராக இருக்கின்றன என்று கூறுகின்றன. ஆனால், இரு தரப்பு கடன் அளிப்பவரிடமும் இதுவரை முறைப்படி அல்லது எழுத்துபூர்வமாக கடன் மறுசீரமைப்பு குறித்து எந்த உறுதிப்படுத்தலையும் இலங்கை வழங்கவில்லை.

சிக்கலான கடன் மறுசீரமைப்பு பேச்சுகள் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி 2023ஆம் ஆண்டுக்கு பின்சென்றது. எனினும், முதல் காலாண்டுக்குள் கடன் ஒப்புதலைப் பெறுவதற்கான சிறந்த முயற்சியில் ஈடுபடுகிறோம் - என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்

15

## கடற்றொழிலாளியின் கழுத்தில் கத்தி வைத்து மிரட்டிய சிப்பாய்!

### காரைநகரில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

காரைநகரில் கடற்றொழிலாளி ஒருவரின் கழுத்தில் கத்தியை வைத்து இராணுவ சிப்பாய் ஒருவர் மிரட்டினார் என்று காரைநகர் கடற்றொழிலாளர் சங்கம் குறறஞ்சாட்டியுள்ளது.

நேற்றையதினம் காரைநகர் - சாம்பல் ஓடை கடற்கரையில் குறித்த தொழிலாளி கருவாடு உலர விட்டுள்ளார். அச்சமயம் அங்கு வந்த சிப்பாய்

15

## தனியார் நிறுவனத்திடம் மருந்து பெறவா அமைச்சர் கெஹலிய இந்தியா சென்றார்?

### சுகாதார பிரிவு மூத்த அதிகாரிகள் சர்ச்சை

கொழும்பு, டிசெ. 23

இந்தியா சென்றுள்ள சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக தரம் குறைந்த மருந்துகளை கொள்வனவு செய்யவுள்ளாரா என்று சுகாதார அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

15

## தாமதமாக சென்ற அமைச்சர் கண்டித்த கொரிய அதிகாரி!

கொழும்பு, டிசெ. 23

சந்திப்பதற்கு குறிக்கப்பட்ட நேரத்தை விட 30 நிமிடங்கள் தாமதமாக சென்ற சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் மற்றும் அவரின் அதிகாரிகளை தென்கொரிய பேரிடர் நிவாரண அறக்கட்டளையின் அதிகாரி சோ சங் லீ கடுமையாக கண்டித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு தென்கொரியா எவ்வாறு உதவலாம் என ஆராய்வதற்காக நேற்று முன்தினம் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்துக்கே அமைச்சரும் அதிகாரிகளும் தாமத

15

## தொற்று நோய் பரவும் அபாயம்! எச்சரிக்கையுடன் செயல்படுக!

### மருத்துவர் வினோதன் எச்சரிக்கை

மன்னார், டிசெ. 23

தற்போதைய தாழமுக்கம் காரணமாக நாடெங்கிலும் பெய்து வரும் அடைமழையால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளமையால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தர்மராஜா வினோதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தற்போது பெய்து வரும் அடைமழை காரணமாக டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகரித்து நோய்

15

## கூட்டமைப்புடனான பேச்சு உத்தியோகபூர்வமற்றது

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 23

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன் எம். பி. ஆகியோருடனான சந்திப்பு உத்தியோகபூர்வமற்றது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

15

## ஒளிரும் காலிமுகத்திடல்...!



நாட்டின் ஆட்சியை மாற்றியமைத்த - 90 நாட்கள் போராட்டம் நடைபெற்ற ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ள காலிமுகத்திடல் பகுதி நத்தார் பண்டிகையை ஒட்டி மின் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. 'இலங்கைக்கு வருக' என்ற வாசகத்துடன் ஒளிரும் இந்தப் பகுதியை ஏராளமானவர்கள் பார்வையிட்டு செல்கின்றனர்.

## அரசியலுக்கு அப்பால்பட்டு சகலரும் ஒன்றிணையுங்கள்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு

- 2023இல் உணவுப் பற்றாக்குறை ஏற்படும்

நுவரெலியா, டிசெ. 23

அரசாங்கத்திடம் அனைத்து பொறுப்புகளையும் ஒப்படைத்து அடுத்த தேர்தலில் அதிகாரத்தை பெற முயற்சிக்கும் பாரம்பரிய அரசியல் முறையிலிருந்து விலகி நாட்டுக்கான தார்மீக பொறுப்பை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

பணவீக்கம் அதிகரித்துள்ளமையால் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான நிலைமையை நாம் மறந்து விடவில்லை. நாட்டின் பொருளாதார பிரச்னைகளை கட்டம் கட்டமாக தீர்த்து அடுத்த வருடம் மக்களுக்கு மேலும் நிவாரணங்கள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நுவரெலியா நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற உணவு பாதுகாப்பு தொடர்பான மாவட்ட வேலைத் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு

15

## மலையகம் 200 பெப். 26 இல்!

கொழும்பு, டிசெ. 23

“மலையகம் - 200” என்ற கருப்பொருளில் இலங்கைக்கு வந்த முதலாம் தலைமுறை இந்திய வம்சாவளி தமிழர்களின் வருகையை நினைவுறுத்தும் நிகழ்வை எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் நாள் ஞாயிறன்று தமிழ் முற்போக்கு கூட்டணி நடத்தவுள்ளது.

இதில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களுக்கு

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது.

முதல்வர் மணிவண்ணன், தன்னைத் தோற்கடித்தன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்குத்தானே தலையில் மண் அள்ளிப் போட்டிருக்கின்றது என்று விபரித்திருக்கிறார்.

அவரைப் பதவியில் அமர்த்தியவர்கள் யார் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. தன்னைப் பதவியில் அமர்த்தியவர்கள் இப்போது நேரம் பார்த்து தன்னை காலை வாரிவிட்டிருக்கிறார்கள் என்று சொல்லாமல், தனது பிரதான அரசியல் எதிரிகளை குறை கூறியிருப்பது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. கூட்டமைப்பு வேட்பாளர் இமானுவல் ஆர்னல்ட்டுக்கு எதிராக முதல்வராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றவர் மணிவண்ணன்.

எந்தக் கட்சி தனது வேட்பாளரை தேர்தல் களத்தில் நிறுத்தியதோ அந்தக் கட்சியின் வேட்பாளருக்கு எதிராகக் களம் இறங்கி, ஈ. பி. டி. பி. என்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் வெற்றிபெற்று முதல்வரானவர் மணிவண்ணன். ஈ. பி. டி. பி. பற்றிய அவரின் பார்வை அவர்களின் ஆதரவு கிடைத்த பின்னர் மாறியிருக்கும் என்பதல்ல. ஆனாலும், அவர் அவர்களின் ஆதரவுடன் கடந்த ஓராண்டுக்கும் மேலாக பதவியில் அமர முடிந்தது. எது எப்படியோ உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் அடுத்த பெப்ரவரியுடன் முடிவடையவிருக்கின்றது.

இப்போது, உள்ளூராட்சி தேர்தலுக்கான ஆயத்தங்களை அரசியல் கட்சிகள் தொடங்கிவிட்டன. ஜனாதிபதியின் ஐக்கிய தேசியக் கட்சியும் அவரை ஆதரித்து அரசில் பிரதான கட்சியாக இருக்கும் சிறீ லங்கா பொதுஜன பொரமுனவும் உள்ளூராட்சி தேர்தலுக்கான ஆயத்தப்பணிகளை தொடங்கிவிட்டன என்று அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்திருக்கிறார்.

தேர்தலை நடத்த ஜனாதிபதி விரும்பவில்லை என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான். அவரைப் பொறுத்தவரை, நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்து, அதனால் தன்மீது ஏற்படும் விம்பத்தை வைத்து தேர்தலை சந்திப்பதையே அவர் விரும்புகின்றார் என்பதை ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், உள்ளூராட்சி தேர்தலை சட்டப்படி நடத்தாமல் இழுத்தடிக்க முயன்றால் அதுவே தனக்கு அரசியல் ரீதியாகப் பின்னடைவைத் தரலாம் என்றும் அவர் நினைக்கக்கூடும்.

அதனால், தான் தேர்தலை பிற்போட விரும்பவில்லை என்று காட்டுவதற்காகத் தேர்தலை எதிர்கொள்வதற்கான முயற்சிகளை ஆரம்பித்துவிட்டு, தேர்தல் இப்போது நடப்பதை விரும்பாதவர்களின் துணையோடு தேர்தலை பிற்போடவும் அவர் முயற்சிக்க மாட்டார் என்றும் கூறிவிடமுடியாது.

உள்ளூராட்சி தேர்தலை சந்திக்க ஜனாதிபதியின் ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமன்றி, மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே. வி. பியும் விரும்பவில்லை.

அந்தத் தேர்தலில் தாம் மூன்றாவது இடத்தையோ அதிகம் ஏன் இரண்டாவது இடத்தைப் பிடித்தால்கூட, அது அடுத்து வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் அவர்களுக்கு என்ன கிடைக்கும் என்பதை வெளிச்சம்போட்டுக் காட்டிவிடும். அதனால்தான் முன்னதாக பாராளுமன்ற தேர்தலை சந்திக்கவே அவர்கள் விரும்புகின்றார்கள். அப்படி சந்திப்பதன் மூலம் தமக்கு கிடைக்கக்கூடிய அதிகபட்ச இடங்களைப் பெறலாம் என்று அவர்கள் கணக்குப் போடுவதிலும் தவறில்லைத்தான்.

இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி தேர்தலில் பொதுஜன பெரமுனவும் சுதந்திரக் கட்சியும் அண்ணளவாக அறுபத்திஐந்து லட்சம் வாக்குகளைப் பெற்றனர். அதைவிட சில இலட்சங்களை ஜனாதிபதி தேர்தலில் பெற்றபோதிலும் பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் அதேயளவு வாக்குகளையே பெறமுடிந்தது.

ஆனால், ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி ஸ்தானத்தில் அதாவது கோட்டாபயவுக்கு எதிரணியில் நின்ற சஜித் பிரேமதாஸ அந்தத் தேர்தலில் ஐம்பத்து ஐந்து இலட்சம் வாக்குகளைப் பெற்றபோதிலும் அதன்பின்னர் நடந்த பாராளுமன்ற தேர்தலில் சஜித் அணி இருபத்தியேழு இலட்சம் வாக்குகளையே பெற்றது.

ஆக, உள்ளூராட்சி தேர்தல் நடந்தாலும் சின்னாபின்னப்பட்டுப் போயிருக்கும் பொதுஜன பெரமுனவும், அதன் ஒவ்வோர் அணிகளும், அதேபோல சுதந்திரக் கட்சியும், எங்கே இருக்கின்றன என்பது தெரியவரும். கடந்த பாராளுமன்ற தேர்தலில் படுதோல்வி அடைந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு ரணில் இப்போது ஏற்றியிருக்கும் 'குளுக்கோஸ்' அதனை எங்கே வைத்திருக்கிறது என்பதும் தெரியவரலாம்.

நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியிலிருந்தபோது, அந்த சுமையை சுமக்க மறுத்த ஐக்கிய மக்கள் சக்திக்கு உண்மையான மக்கள் ஆதரவு எப்படியிருக்கின்றது என்பதும் தெரியவரலாம். அவையெல்லாம் அதற்குப்பின்னர் கட்சிகளிடையே கூட்டணிப் பேரத்துக்குக் கைகொடுக்குமே தவிர, நாட்டுக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை.

என்ன, தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபாய் தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதற்காக அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதனை வழங்குவதற்காக புதிதாக நாணயத்தாள்களை அச்சிடவேண்டியிருக்கும். அது மற்றுமொரு பணவீக்கத்திற்கு வழிவகுக்கும் அவ்வளவுதான்.

இருந்தாலும் ஒரு ஜனநாயக் நாட்டில் மக்கள் வாக்குரிமை என்பது அவசியமானதுதான்.!

**- ஊர்க்குருவி**

# பரீட்சைக்கு தோற்றவிடாது தடை; மனித உரிமை குழுவில் முறையீடு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரி ஒன்றில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலரை பாடசாலை நிர்வாகம் புலமைப்பரிசில் பரீட்சை எழுத விடாது தடுத்துள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் உள்ள பிரபல கல்லூரியில் சில மாணவர்கள் பரீட்சை எழுத விடாமல் கல்லூரி நிர்வாகத்தால் தடுக்கப்பட்டனர்.

மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினால் பாடசாலை மட்ட சித்திவீதத்தில் தாக்கம் ஏற்படும் எனக் கூறியே மாணவர்களை பரீட்சை எழுத விடவில்லை. ஒரு சில மாணவர்களின் பெற்றோர்களிடம் தமது பிள்ளைகளை தாமாக பரீட்சை எழுத அனுமதிக்கவில்லை என கல்லூரி நிர்வாகம் கடிதம் எழுதி வாங்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது. (ஐ-03)

# புத்தக அரங்க விழா காரைநகரில் இன்று!

யாழ்ப்பாணம், டிசெ. 23

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப் பொருளில் தொடர்ச்சியாக புத்தக அரங்க விழா நடக்கிறது. இதன், ஏழாவது நிகழ்வு காரைநகர் இந்துக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் "ஈழத்து நூல்களை அறிவோம்" என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை நினைவு அரங்கில் சிரேஷ்ட சட்டத்தரணி ப. குகனேஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் "கற்க கசடற" நாவல் தொடர்பாக காரைநகர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் கா.நிருபா, வ. வடிவழகையனின் "குறும் பா கொஞ்சம் குறும்பா" கவிதைத் தொகுப்பு பற்றி கவிஞர் ஜெ. கி. ஜெயசீலன், சி. சிவசேகரத்தின் "ஆச்சியின் கொண்டை யூசிகள்" கவிதைத் தொகுதி பற்றி கலைஞர் இ. நிசாந்தன், பு. கணேசராசாவின் "பொறுப்பது உன் விதியோ?" நாடக நூல் தொடர்பாக ஆசிரியர் க.கஜேந்திரன், முருகேசு ரவீந்திரனின் "நிலவு நீரிலும் தெரியும்" சிறுகதைத் தொகுதி பற்றி கவிஞரை வ. வடிவழகையன், திருச்செல்வம் தவரட்ணத்தின் "பனைப்பொருண்மிய வளம்" தொடர்பாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் வே. சேந்தன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

நிகழ்ச்சித் தொகுப்பை யாழ். பல்கலைக்கழக தமிழியல் ஆய்வு நூலக செயற்திட்ட உதவியாளர் ப. சிவப்பிரியா மேற்கொள்வார்.

தொடர்ந்து மாலை 5 மணியளவில் சண் நாடகக் குழுவின் தயாரிப்பில், பு. கணெசராசாவின் நெறியாள்கையில் "காதலுக்கு மருந்து", "தலையெழுத்து" ஆகிய நகைச்சுவை நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன. (ஐ)

# பண்பாட்டு பெருவிழா!

வடமராட்சி, டிசெ. 23

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் - வடமராட்சி வடக்கு கலாசார பேரவை இணைந்து நடத்தும் பண்பாட்டு பெருவிழா - 2022 நிகழ்வு இன்று 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு புலோலி புற்றளை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறீ தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் திருமதி இராச மல்லிகை சிவசுந்தர சர்மா கலந்து கொள்ள வுள்ளார்.

சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை வேலும் மயிலும் அறக்கட்டளை நிறுவன பிரதம பணிப்பாளர் தேவராஜா சிவகுமாரசாமியும் கௌரவ விருந்தினராக தற்காப்பு கலை ஆசான் மாணிக்கம் இரத்தினசோதியும் கலந்து சிறப்பிப்பார்கள்.

சிறப்பு நிகழ்வாக பிரதேச இளம் கலைஞர்களுக்கு கலைப் பரிதி விருது வழங்கி கௌரவிக்கப்படும். (ஐ-02)







யாழ்ப்பாணம் – மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவ பெருவிழா நேற்று வியாழக்கிழமை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. படங்கள்: ஐ. சிவசாந்தன்

ஈழநாடு
Eelanadu
23.12.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# யாழ். மாநகர சபை விவகாரம் - எதனை உணர்த்துகின்றது?

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் இருந்த மணிவண்ணன் அணியின் ஆட்சி கேள்விக்கு உள்ளாகியிருக்கின்றது. தமிழ்த் தேசிய கட்சிகளால் ஒரு மாநகர சபையைக்கூட சரியாக நிர்வகிக்க முடியவில்லை. மணிவண்ணனின் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்கும் நோக்கில் ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) ஆனந்தசங்கரியின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினர் அனைவரும் ஓரணியாக பாதீட்டை தோற்கடித்திருக்கின்றனர்.

2020இல், மணிவண்ணன் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவைப் பெற்றதன் மூலம், மேயரானார். இந்த நிலையில், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அதன் ஆதரவை விலக்கிக் கொண்டதைத் தொடர்ந்து தோல்வியடைந்திருக்கின்றார். உண்மையில், தமிழ்த் தேசிய தரப்புக்கள் அனைவரும் ஓரணியில் நின்றிருந்தால் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவு தேவைப்பட்டிருக்காது. ஆனால், மாநகர சபையை மக்களுக்கு பயனுடைய வகையில் நிர்வகிப்பதை விடவும் ஒவ்வொருவரும் தங்களின் தனிப்பட்ட நலன்களையும் கட்சியின் நலன்களையுமே முன்னிலைப்படுத்தியிருந்தனர். உண்மையில், மாகநகர சபையென்பது கொள்கை சண்டையிடும் இடமுமல்ல.

கட்சியின் தலைமையிடம் தெளிவான பார்வை இல்லாமையாலேயே கீழ் மட்டத்திலிருப்பவர்கள் இவ்வாறான முடிவுகளை மேற்கொள்கின்றனர். மணிவண்ணனும் தான் மேயராக இருக்க வேண்டுமென்னும் அடிப்படையிலேயே செயல்பட்டிருந்தார். அதேபோன்று கூட்டமைப்பும் தங்கள் வசமே மேயர் பதிவி இருக்க வேண்டுமென்று எண்ணியது. இதன் காரணமாகவே இரண்டு தரப்புகளும் இணைந்து செயல்பட முடியாமல் போனது. தமிழ்த் தேசியமே பிரதானமானதென்று மணிவண்ணன் அணி கருதியிருந்தால் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் கூட்டமைப்பின் ஆட்சி தொடர்வதற்கு உதவி இருக்கலாம். அதேபோன்று மணிவண்ணனுடன் உடன்பாட்டை ஏற்படுத் திக்கொண்டு எவ்வாறு மாநகர சபையின் நிர்வாகத்தை தொடர்வதென்று கூட்டமைப்பு முயற்சித்திருக்கலாம். ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அரசியல் அணுகுமுறைகள் முற்றிலும் வேறானது. அரசாங்கத்தின் அங்கமாக இருக்கும் ஒரு கட்சியின் உறுப்பினர்களோடு இணைந்து செயல்படுவது கடினமானது. இதனை சரிவரப் புரிந்துகொள்ளாமல் செயல்பட்டது மணிவண்ணனின் தவறாகும்.

தேர்தல் மற்றும் பதவி நலன்கள் என்று வருகின்றபோது, தேசியம் இரண்டாம் விடயமாகி விடுகின்றது. யாழ். மாநகர விவகாரம் இதனை மீண்டுமொருமுறை நிருபித்திருக்கின்றது. யாழ்ப்பாண கலாசார மண்டபத்தின் நிர்வாகத்தை யாழ். மாநகர சபையிடம் வழங்குவதற்கு அரசாங்கம் இழுத்தடித்து வருகின்றது. இந்தியா ஐந்து வருடங்களுக்கு உதவுவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றது. எனினும், கலாசார மண்டபத்தின் நிர்வாகத்தை முற்றிலுமாக யாழ். மாநகர சபையால் கட்டுப்படுத்துப்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான் யாழ். மாநகர சபையின் பாதீடு தோற்கடிக்கப்பட்டிருப்பதன் மூலம் மாகநகர சபையின் நிர்வாகத்தின் பலவீனம் வெளியில் வந்திருக்கின்றது. இது வெறுமனே யாழ். மாநகர சபையின் ஆட்சி தொடர்பான பிரச்னை இல்லை - மாறாக தமிழர்களின் நிர்வாக பலவீனத்துக்கான சான்றாகும். அதிகாரத்தை கோரிவருகின்ற தமிழர்களிடம் அதிகாரத்தை வழங்கினால் அதனை திறம்பட முன்னெடுப்பதற்கான ஆளுமை அவர்களிடம் இல்லை என்பதையே இவ்வாறான சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன.

க. வி. விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபோதும் கட்சிகள் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டன. இறுதியில் தமிழரசு கட்சியினர் விக்னேஸ்வரனுக்கு எதிராக ஆளுநரிடம் சென்றனர்.

ஆளுநரால் மாகாண சபையை முறையாக நிர்வகிக்க முடியாமல் இருக்கின்றது. அதனால் அளுநரின் அதிகாரத்தை இல்லாதொழிக்க வேண்டுமென்பதே தமிழரின் கோரிக்கையாக இருக்கின்றது. ஆனால், தாங்கள் இறக்குமதி செய்த முதலமைச்சருக்கு எதிராக, ஆளுநரிடம் செல்லும் நிலையிலேயே தமிழ்த் தேசிய சக்திகள் இருந்தனர். இவைகள் குறித்து தமிழர்கள் பெருமைப் படலாமா? இருக்கின்ற அதிகாரங்களையே திறம்பட கையாளத் தெரியாதவர்கள் - கூடுதலான அதிகாரங்களை எவ்வாறு ஓரணியாக - திறம்பட கையாளுவார்கள்? இவ்வாறான கேள்வியுடனல்லவா தமிழர்கள் நோக்கப்படும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சதிவலையாலேயே பட்ஜெட் தோல்வி

## பருத்தித்துறை நகர சபை முன்னாள் தலைவர்

*வடமராட்சி, டிசெ. 23*

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் சதிவலையில் சிக்கி எமது கட்சியைச் சேர்ந்த - என்னோடு இருந்து எனக்காகவே வேலை செய்த நகரசபை உறுப்பினர் அல்லாத ஒருவரே என்னை தோற்கடிக்க முழுமையாக செயல்பட்டார் என பருத்தித்துறை நகரசபை முன்னாள் தவிசாளர் ஜோசப் இருதயராசா தெரிவித்துள்ளார்.

தனது இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், 15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகரசபையில் 05 உறுப்பினர்களை (நான் உட்பட) கொண்ட எங்கள் கட்சி அணியை தலைமைதாங்கி சபையை பொறுப்பெடுத்து, தனித்து எண்ணிக்கை பலம் அற்ற குழுவாக இருந்தும் பெரும் சிரமங்கள், சவால்களைக் கடந்து இதுவரை சிறப்பாக சபையின் செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளேன்.

இதற்கு எமது கட்சி அங்கத்தவர்கள் மட்டுமல்ல சில மாற்றுக் கட்சி, மற்றும் சுயேட்சை குழு உறுப்பினர்களின் ஆதரவு முக்கியமானது என்பதை நான் குறிப்படாது புரிந்து கொள்வீர்கள். இதுவரை இவர்கள் காட்டிய ஒத்துழைப்புக்கு எனது நேர்மையானதும் அனைவரையும் அணைத்து நகர அபிவிருத்தியில் அக்கறையுடனும் செயல்பட்டமையே காரண மாகும்.

நகரசபையின் கண்ணியத்துக்கும் கௌரவத்துக்கும் குந்தகம் ஏற்படாதவகையில் நேர்மையான, ஒழுக்கமான தவிசாளராகவே இறுதிவரை இருந்துள்ளேன். இந்த 'நகரசபை' கலைக்கப்பட இன்னும் சிறிதுகாலமே இருக்கின்ற நிலையில், உள்ளூராட்சி சபைகள் அனைத்தும் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் விரைவில் வர இருக்கிறது. அதைக்குறி வைத்து 2023 ஆம் ஆண்டுக்கான 'பாதீட்டை' தோல்வியுறச் செய்து தமக்கான விளம்பரத்தை சிலர் அரசியல் உள்நோக்குடன் முன்னெடுத்து மலிவான அரசியல் செய்ய முனைகின்றனர். இதற்கு எமது கட்சி (தமிழரசுக் கட்சி) உறுப்பினர் ஒருவரும் 'கோடரிக்காம்பாக' அமைந்தது துர்ப்பாக்கியமானது.

வரவு - செலவு திட்டம் முதல் தடவை சமர்ப்பிக்கப்பட்டபோது தமது எதிர்மறையான நிலைப்பாடு பற்றி எனக்கோ, கட்சிக்கோ எதுவும் தெரியப்படுத்தாது அதனைத் தோற்கடித்து நகர மக்களுக்குத் துரோகம் இழைத்தமை எவ்வகையிலேனும் நியாயப் படுத்தப்பட முடியாத ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

*(ஐ-02)*

# யாழ்ப்பாண மாநகரில் விசேட டெங்கு தரிசனம்

*யாழ்ப்பாணம், டிசெ. 23*

அதகரித்து வரும் டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் மாநகர பகுதியின் ஜே/77, ஜே/78 கிராம சேவகர் பிரிவுகளில் இன்று வெள்ளிக்கிழமை விசேட டெங்கு கட்டுப்பாடு தரிசிப்பு நடைபெறவுள்ளது என்று அந்தப் பகுதிக்கு பொறுப்பான பொதுப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிகளில் குடியிருப்பாளர்கள் டெங்கு நோயை கட்டுப்படுத்தும்விதமாக தங்கள் காணிகளில் தூய்மை பேணுமாறு அறிவித்துள்ள அவர், டெங்கு நோய் பரவாத சூழலை உருவாக்க அனைவரும் முன்வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். *(ஐ)*

# சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், டிசெ. 23*

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்பு சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் 'பிள்ளையாரும் பெருங்கதையும்' என்ற தலைப்பில் ஆற்றுவார். *(ஐ)*

# பேராசிரியர் கைலாசபதி நினைவுக் கருத்தரங்கு!

*யாழ்ப்பாணம், டிசெ. 23*


தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டில் பேராசிரியர் க. கைலாசபதியின் 40ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

தாயகம் சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியர் ச. சத்தியதேவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் தொடக்க உரையை, 'தேசிய கலை இலக்கியப் பேரவையின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் பேராசிரியர் கைலாசபதியின் பங்கு' என்ற தலைப்பில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் க. தணி காசலம், சிறப்புரையை 'போருக்குப் பிந்தைய பெண்களின் நாவல்கள்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் விரிவுரையாளர் த. அஜந்த குமார் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

*(ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு






**மேடம்**
உங்கள் முயற்சி இழுபறியாகும். செயலில் கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும்.எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும். சட்டரீதியான சங்கடத்தை சிலர் சந்திப்பர்.

**இடபம்**
வேலை வாய்ப்பை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். உற்சாகத்துடன் செயல்பட்டு விரும்பியதை அடைவீர்கள். பொன் பொருள் சேரும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்**
உடல்நிலை சீராகும். உற்சாகமுடன் செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள்.எதிரி தொல்லைக்கு சட்ட ரீதியாக முடிவு கட்டுவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்**
உங்கள் செயல்களில் சில தடை ஏற்படும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். ஒரு செயலில் போராடி வெல்வீர்கள். வியாபாரத்தில் போட்டியை சந்திப்பீர்கள்.லாபம் உண்டாகும்.

**சிம்மம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும் நாள். உங்கள் செயல்களை மற்றவர்கள் பாராட்டுவர். செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரம் சம்பந்தமாக மேற்கொண்ட முயற்சி வெற்றியாகும். வருவாய் உயரும்.

**கன்னி**
விடாமுயற்சியால் ஆதாயம் காண்பீர்கள். உங்கள் ஆலோசனை ஏற்கப்படும். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும்.

**துலாம்**
நல்ல நாள்.எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். பண விஷயங்களில் கூடுதல் கவனம் தேவை. தொழிலை விரிவு செய்வீர்கள். ஆதாயம் உயரும். பொன், பொருள் சேரும்.

**விருட்சிகம்**
விருப்பங்கள் நிறைவேறும். தொழில் ரகசியங்களை யாருக்கும் தெரிவிக்க வேண்டாம். பணத்தில் கவனம் தேவை.பொன் பொருளைக் கையாள்வதில் கவனம் தேவை. வீண்சிந்தனைக்கு இடம் தராதீர்கள்.

**தனுசு**
வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். திடீர் செலவால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். திடீர் பயணம் ஏற்படும். பணியாளர்கள் உங்கள் எண்ணத்திற்கு எதிராக செயல்படுவர்.

**மகரம்**
திட்டமிட்ட செயல் நிறைவேறும். எதிர்பார்த்த வருவாய் வரும். சங்கடம் தீரும். நண்பர்கள் உதவியுடன் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். நீண்டநாள் விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்**
வியாபாரத்தில் லாபம் உண்டு.எதிர்பார்த்த பணம் வரும். புதிய முயற்சியில் ஆதாயம் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தொழிலில் மந்தநிலை மாறும். வருமானம் காண்பீர்கள்.

**மீனம்**
எதிர்பார்த்த செய்தி தேடிவரும்.கொடுக்கல் வாங்கலில் ஆதாயம் உண்டாகும். பணிபுரியும் இடத்தில் தனித்தன்மை வெளிப்படும். மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். வழிபாட்டில் மனம் செல்லும். குடும்ப பிரச்சினைகள் தீரும்.

# ஓர் இனத்தின் இரத்த ஓட்டம் மொழிதான்!

## முதலமைச்சர் ஸ்டாலின்



சென்னை, டிசெ. 23

மொழிதான் ஓர் இனத்தின் இரத்த ஓட்டம். மொழி அழிந்தால் இனம் அழியும் என்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் தமிழ்இசை மன்றத்தின் 80ஆம் ஆண்டு விழாவை தொடக்கி வைத்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல நூற்றாண்டுகளாக தமிழ் நிலப்பரப்பு பல்வேறு பண்பாட்டு படையெடுப்புகளுக்கு ஆளானது எனக் கூறிய அவர், அந்நியர் ஆக்கிரமிப்பால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டது. அந்நியர் இன படையெடுப்பால், தமிழ் இனம் அதன் உரிமையை இழந்தது, அந்நிய மொழிக்காரர்களின் உடுருவலால் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. ஆதிக்க வர்கத்தினரால், தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

இந்த சூழலில் தமிழகத்தின் உரிமையை காக்க திராவிட இயக்கம் எழுந்தது. தமிழ் மொழியை காக்க மறைமலை அடிகள் தலைமையில் தனி தமிழ் இயக்கம் எழுந்தது, தமிழ் கலையை காக்க இந்த தமிழ் இசை சங்கம் எழுந்தது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் ஆள வேண்டும் என்றும் கூறினார். (ஐ)

# சாந்தனின் இலங்கை கடவுச்சீட்டை அவரிடமே ஒப்படைக்க உத்தரவு!

சென்னை, டிசெ. 23

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட இலங்கையரான சாந்தனின் கடவுச்சீட்டை மீள வழங்க சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சாந்தனின் கடவுச்சீட்டை பறிமுதல் செய்த சி. பி. ஐ. அதிகாரிகள், அதை சென்னை அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர். இந்த வழக்கில் ஆயுள் கைதியாக வேலூர் மத்திய சிறையில் சாந்தன் அடைக்கப்பட்டிருந்தார்.



இந்நிலையில், ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருந்த நளினி, முருகன், சாந்தன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோரை கடந்த நவம்பர் 11ஆம் திகதி உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது.

முன்னதாக, நீதிமன்றத்தில் உள்ள தனது கடவுச்சீட்டு 1995ஆம் ஆண்டு காலாவதியாகி விட்டது. அதை புதுப்பிப்பதற்காக, திரும்ப தரக்கோரி சாந்தன் தரப்பில் சென்னை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதி நேற்று விசாரணைக்கு வந்தது. திருச்சி முகாமில் இருந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் சாந்தன் அழைத்துவரப்பட்டு, நீதிபதி முன் முற்படுத்தப்பட்டார்.

சாந்தனின் பெயர் உள்ளிட்ட அடையாளங்களை சரிபார்த்த நீதிபதி, கடவுச்சீட்டை திருப்பிக் கொடுக்க உத்தரவிட்டார். அதேசமயம் நீதிமன்றத்துக்கு தேவைப்படும் பட்சத்தில் கடவுச்சீட்டை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவைத் தொடர்ந்து சாந்தனின் கடவுச்சீட்டு அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# தி. மு. கவுடன் கூட்டணியா தலைமையே முடிவு செய்யும்!

## பா. ஜ. க. கட்சி சட்டமன்ற உறுப்பினர்

சென்னை, டிசெ. 23

தற்போது வரை அ. தி. மு. க. கூட்டணியில் நீடிக்கிறோம். பாராளுமன்றத் தேர்தலில் தி. மு. கவுடன் கூட்டணி வைத்து தேர்தலை சந்திக்கிறோமா என்பது குறித்து பாரதிய ஜனதா கட்சியின் பாராளுமன்ற குழு முடிவு செய்யும் என அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

அ. தி. மு. க. கூட்டணியிலேயே நீடிக்கிறோம். பாராளுமன்றத் தேர்தலில் தி. மு. கவுடன் கூட்டணி சேர்கிறோமா என்பது குறித்து எங்களது கட்சியின் பாராளுமன்ற குழு கூடி முடிவு செய்யும்.

சி. வி. சண்முகம் போன்ற இரண்டாம் கட்ட தலைவர்களின் பேச்சு அவர்களின் சொந்த கருத்து. அதனை கட்சியின் கருத்தாக ஏற்றுக் கொள்ள முடியாது. பாரதிய ஜனதா கட்சி தி. மு. கவுடன் கூட்டணி அமைக்க உள்ளது என்று அவர் எவ்வாறு கூற முடியும்.

பா. ஜ. க. மாநில தலைவரோடு மூத்த நிர்வாகிகள், தலைவர்களுக்கு எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. ஏப்ரல் மாதம் மாநில தலைவர் அண்ணாமலை தொடங்கும் யாத்திரையில் கலந்து கொள்வேன் - என்றார்.

# அரசை கண்டித்து போராட்டம் 9,500 அ. தி. மு. கவினர் கைது!

சென்னை, டிசெ. 23

சென்னையில் தி. மு. க. அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய 9,500 அ. தி. மு. கவினர்மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சொத்து வரி, பால் மற்றும் மின் கட்டண உயர்வை கண்டித்தும் தி. மு. க. அரசை கண்டித்தும், சென்னையில் நேற்று பல்வேறு இடங்களில் அ. தி. மு. க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மொத்தம் 34 இடங்களில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், அந்தக் கட்சியின் நிரவாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அதிமுகவினர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், விஜயபாஸ்கர் உள்ளிட்ட நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், அ. தி. மு. க. ஆதரவாளர்கள் என மொத்தம் 9,500 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# ரூ.16 பில்லியன் சீனி வரி மோசடி; விசாரிக்கப்படவுள்ளார் கோட்டா?

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தீர்மானம்



கொழும்பு, டிசெ. 23

**சீனி வரி மோசடி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக ஆங்கில பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

சர்ச்சைக்குரிய சீனி வரி மோசடி தொடர்பில் வாக்கு மூலம் பெற்றுக் கொள்வதற்காக அப்போது வர்த்தக அமைச்சராக இருந்த பந்துல குணவர்தன இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அழைக்கப் பட்டிருந்த போதிலும் அவர் அதற்கு வேறு திகதியை கோரி யுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு பந்துல குணவர்தனவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

ஆனால் குறித்த தகவல்களை தயார் செய்ய அவகாசம் தேவை என்பதை சுட்டிக்காட்டி அவர் வேறு திகதியை கோரியுள்ளதாக கூறப்படுகிறது.

சீனி வரி மோசடியினால் திறைசேரிக்கு 16 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அத்துடன், தான் அப்போது வர்த்தக அமைச்சராக இருந்தும் ஒரு கிலோ சீனிக்கான 50 ரூபா வரியை 25 சதமாகக் குறைக்கும் தீர்மானம் தொடர்பில் தனக்குத் தெரியாது எனவும் பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார்.

அந்த தீர்மானத்தை எடுக்குமாறு பல அரச அதிகாரிகள் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் பந்துல குணவர்தன கூறியிருந்தார்

சீனி வரி குறைப்பு குறித்த வர்த்தமானி அறிவித்தல் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபயவின் ஆலோசனைக்கு அமையவே வெளியிடப்பட்டதாக நிதியமைச்சின் அதிகாரிகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவிடம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வாக்குமூலம் பெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)



# கடலட்டை பண்ணையால் கடற்றொழிலுக்கு பாதிப்பு

## வடக்கு ஆளுநருக்கு மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணம் அனலைதீவு பகுதியில் கடற்றொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகளை உடன் அகற்றுமாறு கோரி அப்பகுதி கடற்றொழிலாளர்கள் சார்பில் நேற்று முன் தினம் வடமாகாண ஆளுநருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது

வடமாகாண ஆளுநருக்கான மகஜர் கையளிக்கும் நிகழ்வில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா, அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் டொன் போஸ்கோ மற்றும் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு இளைஞர்களே வன்முறைகளில் ஈடுபடாதீர்!

## ஆறு. திருமுருகன் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 23

அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவும் போது விபத்துக்களில் சிக்காமலும் வன்முறைகளில் ஈடுபடாமலும் இளைஞர்கள் இருக்க வேண்டுமென சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

கனேடியத் தமிழர்கள் 10 மில்லியன் ரூபா பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகளை தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கினர். இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. இந்நிலையில் இளைஞர்கள் விபத்துக்களில் சிக்குதல், வாள் வெட்டு வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபடல் போன்றவற்றால் தேவையற்ற நெருக்கடி ஏற்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் பாடசாலைகளில் காகித தட்டுப்பாடு ஏற்படும். இவ்வாறான நேரத்தில் புலம்பெயர் தேசத்தவர்கள் நீங்கள் படித்த பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு உதவுவதற்கு முன்வரவேண்டும்.

குளிரூட்டி, நவீன சாதனங்கள் வழங்குவது என்பது ஒரு பக்கம் இருக்க அடிப்படை விடயமான கல்வியில் நாம் கரிசனை கொள்ள வேண்டும்.

இலவச பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காக அரசாங்கம் திண்டாடும் போது அடிப்படை கல்விக்கான புத்தகங்கள் கொப்பிகளை வாங்குவதற்கு புலம்பெயர் தேசத்தவர்கள் உதவவேண்டும் - என்றார். (அ)

# கிராம அலுவலர் பதவியை மாற்றுவதற்கு முன்மொழிவு

கொழும்பு, டிசெ. 23

கிராம உத்தியோகத்தர் பதவியை கிராமச் செயலாளராக மாற்றுவதற்கு முன்மொழிவதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக் பிரியந்த தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற அகில இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் 15ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்ட போதே அவர் இதனை கூறியுள்ளார். (அ)

# ஆறு நிலக்கரிக் கப்பல்கள் ஜனவரியில் இலங்கை வரும்



கொழும்பு, டிசெ. 23

சில பிரிவினர் கூறுவது போல் நாட்டில் நிலக்கரி பற்றாக்குறை ஏற்படாது என லங்கா நிலக்கரி நிறுவனம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஜனவரி முதல் வாரத்தில் மற்றுமொரு நிலக்கரி கப்பல் நாட்டுக்கு வரவுள்ளதாக லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஷெஹான் சுமனசேகர தெரிவித்தார்.

ஜனவரியில் ஆறு நிலக்கரி கப்பல்களை எதிர்பார்ப்பதாகவும், மூன்று கப்பல்களுக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அட்டவணையின்படி அடுத்த நிலக்கரி கப்பல் ஜனவரி முதல் வாரத்தில் புத்தளத்தில் நிறுத்தப்படும்.

தென்னாப்பிரிக்காவில் உள்ள ஒரு முனையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இறக்குமதி தாமதமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளதை ஒப்புக் கொண்ட அவர், டிசெம்பர் 31ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் நிலக்கரி இருக்காது என குறிப்பிட்ட தொழிற்சங்கங்கள் கூறியதை நிராகரித்துள்ளார். (அ)

# கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு தேவாலயங்களுக்கு பாதுகாப்பு

கொழும்பு, டிசெ. 23

நத்தார் தினத்தை முன்னிட்டு தேவாலயங்களுக்கு விஷேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நத்தார் தின ஆராதனைகள் மற்றும் அது தொடர்பான விசேட வைபவங்கள் இடம்பெறும் அனைத்து தேவாலயங்களுக்கும் முழுமையான பாதுகாப்பை வழங்குவதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இது தொடர்பில், தேவாலயங்களுக்கு பொறுப்பான அருட்தந்தையர்களை சந்தித்து, கலந்துரையாடி அதற்கான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், தேவாலயங்களுக்குள் பிரவேசிக்கும் இனந்தெரியாத நபர்களை அடையாளம் காணும் விசேட வேலைத்திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# சீனா, இந்திய உத்தரவாதத்துக்கு காத்திருக்கிறது இலங்கை அரசு



## மத்திய வங்கி ஆளுநர் தகவல்

கொழும்பு, டிசெ. 23

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு, இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட இரு தரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து நிதியுதவிக்கான உத்தரவாதத்துக்காக இலங்கை காத்திருக்கிறது என்று இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் பி.நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை கடந்த சில மாதங்களாக சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய மூன்று முக்கிய தரப்பு கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் அந்த நாடுகள், விரைவில் சாதகமான பதிலை வழங்கும் என்று எதிர்பார்த்துள்ளோம்.

இதில், இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் தற்காலிக உடன்படிக்கையில் நுழைந்த காலத்திலிருந்து, சமத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மையின் அவசியத்தை இந்தியா அடிக்கோடிட்டுக் காட்டியது.

இலங்கை இந்த ஆண்டு இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் நிவாரணத்தைப் பெறுவதை இலக்காகக் கொண்டிருந்தாலும், இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் இழுத்தடிக்கப்பட்டதால், அது தோல்வியடைந்தது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு ஒக்ரோபரில் நடைபெற்றமை மற்றும் சீனாவில் கொரோனா கட்டுப்பாடுகள் போன்ற உள்நாட்டுப் பிரச்னைகளை காட்டி, சீனாவுடனான பேச்சுவார்த்தை சிறிது தாமதமானது.

எனினும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியை பெறமுடியாமைக்கு சீனாவின் தாமதம் மாத்திரம் காரணம் அல்ல.

இந்த நிலையில், கடன் வழங்குநர்களிடம் இருந்து உத்தரவாதம் கிடைத்தால், சர்வதேச நாணய நிதியம், கடன் வழங்கலை அங்கீகரிக்க, நான்கு முதல் ஆறு வாரங்கள் செல்லும்.

இரு தரப்பு கடன்களுக்கு மேலதிகமாக, இலங்கை பல ஆண்டுகளாக தனியார் கடனாளர்களிடமிருந்து பெருமளவில் கடன் பெற்றுள்ளது.

இது நாட்டின் மிகப்பெரிய வெளிப்புறக் கடன் மூலமாகும்.

எனினும் சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டம் ஆரம்பித்த பின்னரே வணிகக் கடன் வழங்குபவர்களுடனான உண்மையான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும்-என்றார். (அ)

# அரச நிறுவன ஊழியர்களுக்கு இவ்வாண்டு ரூ.25,000 போனஸ்

கொழும்பு, டிசெ. 23

வணிக நிறுவனங்கள், சட்டபூர்வ சபைகள், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த போனஸ் வழங்குவது தொடர்பான இரண்டு சுற்றறிக்கைகளை திறைசேரி வெளியிட்டுள்ளது.

சுற்றறிக்கையின்படி, ஊழியர்களுக்கு போனஸ் கொடுப்பனவு 25,000 ரூபாவுக்கு மிகையாகாமல் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நட்டமடைந்துள்ள நிறுவனங்களுக்கு போனஸ் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மின்சார கட்டணம் அதிகரித்தால் ஆடை உற்பத்தி பாதிக்கப்படும்!

கொழும்பு, டிசெ. 23

மீண்டும் மின்சாரக் கட்டணங்கள் 60-70 வீதத்தால் அதிகரிக்கப்பட்டால், இலங்கையின் ஆடைத் தொழிலை உலகளவில் பராமரிக்க முடியாத நிலை ஏற்படும் என ஆடை உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இதனைக் கூறினர்.

மீண்டும் ஒருமுறை மின் கட்டண உயர்வை ஆடைத்தொழிலால் தாங்க முடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையில் வியாபாரம் செய்வதற்கு போட்டியான சூழல் இருக்கவேண்டும் எனவும், டொலரின் பெறுமதியை கடைசி மின்சாரத்துடன் எடுத்துக் கொண்டால் இலங்கையில் உற்பத்திச் செலவு அதிகமாகும் எனவும் ஒன்றிணைந்த ஆடைகள் சங்க மன்றத்தின் செயலாளர் நாயகம் யோகன் லோரன்ஸ் தெரிவித்தார். (அ)

# சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்றை நிறுவ அரசு தீர்மானம்

கொழும்பு, டிசெ. 23

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், வெளிநாட்டு வர்த்தகத் துறையிலிருந்து தேசிய பொருளாதாரத்துக்கு அதிகபட்ச உற்பத்தியைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தற்போதுள்ள பாரம்பரிய நிறுவனங்களை மறுசீரமைத்து, அந்த நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் புதிய சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்றை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

2023 பாதீட்டு உரையில் அறிவிக்கப்பட்டதன்படி, சர்வதேச வர்த்தக அலுவலகம் முதலில் நிதி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு பின்னர் வெளிவிவகார அமைச்சுடன் இணைக்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக அபிவிருத்திக் கொள்கையை மேம்படுத்தி, பயனுள்ள ஒருங்கிணைப்புடன் அதனை உலகளவில் நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அலுவலகம் நிறுவப்படவுள்ளது. (அ)

# உயர்கல்வி பெறுவது ஒவ்வொரு பெண்ணின் அடிப்படை உரிமை

## தலிபான்களின் அறிவிப்புக்கு அலி சப்ரி பதில்



கொழும்பு, டிசெ. 23

உயர்கல்வி பெறுவது ஒவ்வொரு பெண்ணின் அடிப்படை உரிமை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அத்தகைய உரிமையை மறுப்பது மன்னிக்க முடியாதது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பெண்களுக்கு அதிகாரம் வழங்காமல், அவர்களை கண்ணியமாகவும், சமத்துவமாகவும் நடத்தாமல், எந்த நாடும் அல்லது சமூகமும் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை அடைய முடியாது என அமைச்சர் ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு பல்கலைக் கழகங்கள் மூடப்படும் எனத் தலிபான்கள் அறிவித்ததைத் தொடர்ந்து அமைச்சர் இந்த கருத்தை தெரிவித்துள்ளார். (அ)

# நான்கு ஆண்டுகளுக்கு பின்னரே ஜனாதிபதி தேர்தலை நடத்தலாம்

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 23

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது. எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடுவதற்கு அச்சமில்லாதபோதிலும், நான்கு வருடங்களின் பின்னரே ஜனாதிபதித் தேர்தலை சட்டபூர்வமாக அறிவிக்க முடியும் என பிரதான பாராளுமன்ற எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இது குறித்து தெரிவிக்கையில்-

எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம், ஆனால் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஜனாதிபதி தேர்தலை ஜனாதிபதி அறிவிக்க முடியும். நான்கு வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலைப் பற்றி பேசுபவர்கள் சட்டரீதியாக நடத்த முடியாத ஒன்றைக் குறிப்பிடுகின்றனர்-என்றார். (அ)

# போதைப்பொருள் பாவிப்போரை சோதிக்க அதிநவீன உபகரணம்!

கொழும்பு, டிசெ. 23

போதைப்பொருள் பாவித்து வாகனம் ஓட்டுபவர்களை அடையாளம் காண நவீன தொழிநுட்ப உபகரணங்கள் மூலம் சோதனைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் போதையில் வாகனம் செலுத்தும் நபர்களை கைது செய்வதற்கும் அவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நாளாந்தம் வாகன விபத்துக்களில் சுமார் 8 பேர் உயிரிழப்பதாகவும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் 4 அல்லது 5 பேர் உயிரிழப்பதாகவும் பொலிஸ் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# 55 ரூபாவுக்கு அதிக விலையில் முட்டைகளை வாங்காதீர்கள்!



கொழும்பு, டிசெ. 23

55 ரூபாவுக்கும் அதிகமான விலைக்கு முட்டையை கொள்வனவு செய்யவேண்டாம் என அகில இலங்கை கோழி இறைச்சி வர்த்தகர்கள் சங்கம் பொதுமக்களை கோரியுள்ளது.

அகில இலங்கை கோழி இறைச்சி வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதிக விலைக்கொடுத்து முட்டையை சில்லறை வர்த்தகர்களிடம் கொள்வனவு செய்யவேண்டாம்.

49 முதல் 50 ரூபாவுக்கு இடைப்பட்ட விலைகளில் முட்டையை விநியோகிக்குமாறு உற்பத்தியாளர்களிடம் கோரப்பட்டுள்ளது.

எனவே, அதிகூடிய விலைக்கு முட்டையை கொள்வனவு செய்ய வேண்டாம் என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# சீனாவிடம் இருந்து கிடைத்த எரிபொருள் விவசாயிகளுக்கு

கொழும்பு, டிசெ. 23

சீன அரசாங்கத்திடமிருந்து கிடைத்த எரிபொருளை ஒரு ஹெக்ரேயருக்கும் குறைவாக நெற்செய்கை மேற்கொள்ளும் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கு அமைய, சீன அரசாங்கத்திடமிருந்து 10.06 மில்லியன் லீற்றர் எரிபொருள் கிடைத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அந்த தொகையில் 6.98 மில்லியன் லீற்றர் எரிபொருள் விவசாயிகளுக்கும் மிகுதி எரிபொருள் மீனவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

அந்தந்த மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான நிரப்பு நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது. (அ)

# அடுத்த வருடம் தேர்தல் நடத்த 10 பில்லியன் ரூபாய் உள்ளது!

## தேர்தல் ஆணைக்குழு கூறுகிறது

கொழும்பு,டிசெ.23

**2023 ஆம் ஆண்டு தேர்தலை நடத்துவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் 10 பில்லியன் ரூபாய் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் தேர்தலை நடத்துவதற்காக மொத்தமாக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்கத்தினால் தேர்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான அறிவிப்பு அடுத்த வாரம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# வீதியில் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

கொடிகாமம் குடமியன் பகுதியில் வீதியால் நடந்து சென்ற பெண்ணின் ஒரு பவுண் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் முகத்துக்கு கறுப்புத் துணிகளை கட்டிக்கொண்டு வந்த இரு இளைஞர்களே இத்துணிகர கொள்ளையை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.(அ)

# 2022ஆம் ஆண்டு வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.மேற்குப் பிரதேச சபையில் இரத்த தானம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

2022ஆம் ஆண்டு வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது.

நேற்று வியாழக்கிழமை வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வுவில் பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)



# சிறப்பாக இடம்பெற்றது மன்னார் கலாசார விழா




மன்னார், டிசெ. 23

மன்னார் பிரதேச செயலகம் மற்றும் மன்னார் கலாசார பேரவை இணைந்து நடத்திய 2022 ஆம் ஆண்டுக்கான மன்னார் பிரதேச கலாசார விழா நேற்று முன் தினம் புதன் கிழமை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் வடமாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்திலுள்ள கலைஞர்களுடன் சந்திப்பு, கலை நிகழ்வு, கலைஞர்கள் கௌரவிப்பு மற்றும் வருட வருடம் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரனையுடன் வெளியிடப்படும் மன்னல் நூல் வெளியீடு என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி அன்னை இல்ல பணிப்பாளர் அருட்தந்தை செபமாலை அன்புராசா அடிகளார் ,மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பரந்தாமன் மற்றும் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# மயிலிட்டி மீனவரின் சடலம் நேற்று மாதகலில் ஒதுங்கியது

யாழ்ப்பாணம், டிசெ. 23

மயிலிட்டி கடலில் காணாமல்போன மீனவரின் சடலம் இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, மாதகல் கடற்பகுதியில் நேற்று கரையொதுங்கியது.

பலாலி, அன்ரனிபுரம் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற 54 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கடந்த 20ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார்.

காணமல்போன கடற்றொழிலாளரை அப்பகுதிமக்கள் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

காணமல்போன மீனவர் பயணித்த படகு கவிழ்ந்த நிலையில் கரையொதுங்கியது. காணமல்போன கடற்றொழிலாளரை தேடும் பணி இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் அவர் நேற்று மாதகல் கடலில் சடலமாக மீட்கப்பட்டார். மீட்கப்பட்ட சடலம் பிரதேச பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இராயப்பு றொபேட் கெனடி (வயது-54) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இது குறித்து இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



# முதலீட்டு சபையின் புதிய தலைவராக தினேஷ் வீரக்கொடி



கொழும்பு, டிசெ. 23

முதலீட்டுச் சபையின் புதிய தலைவராக தினேஷ் வீரக்கொடி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

முதலீட்டுச் சபையின் ஏனைய சபை உறுப்பினர்களாக கலாநிதி துஷ்னி வீரக்கோன், சாந்தனி விஜேவர்தன மற்றும் எராஜ் டி சில்வா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டிசெம்பர் முதல் 20 நாள்களில் 50,375 சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, டிசெ. 23

டிசெம்பர் மாதத்தின் முதல் 20 நாட்களில் 50,000 க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

டிசெம்பர் மாதத்தில் வந்த சுற்றுலாப் பயணிகளில் 49 வீதமானவர்கள் ரஷ்யா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

டிசெம்பர் மாதத்தில் மொத்தம் 50,375 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்த மாதம் ரஷ்யா, இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், மாலைதீவுகள் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இருந்து 1000 க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு இலங்கைக்கு 678,392 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இந்தியா, இங்கிலாந்து, ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது.

மார்ச் மாதத்தில் 106,500 சுற்றுலாப் பயணிகள் வந்தனர், பின்னர் பொருளாதார நெருக்கடி, எதிர்ப்புகள் மற்றும் பாரம்பரிய பயணிகளுக்கு விடுமுறை காலம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது.

கடந்த சில மாதங்களாக மற்றும் ஐரோப்பாவில் குளிர்காலம் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேற்கத்திய நாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான வருகையை சுற்றுலா அமைச்சு எதிர்பார்க்கிறது.

2021 டிசெம்பரில் 89,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தனர்.

குளிர்கால மாதங்களில் சுற்றுலாப் பயணிகளை குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து வரும் பயணிகளை ஈர்க்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# கொரோனா வைரஸ்:

## சீனாவில் நிரம்பி வழியும் மயானங்கள் பிணங்களை எரிக்கக் குவியும் கூட்டம்

- பெட்ரா சிவிக்

கோவிட் பெருந்தொற்று பரவல் மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளதால் திணறிவருகிறது சீனா. சீனா முழுவதுமுள்ள தகனக் கூடங்களுக்கு இறந்த உடல்கள் அதிக அளவில் கொண்டுவரப்படுவதால், கூட்டத்தைச் சமாளிக்க அவற்றின் ஊழியர்கள் சிரமப்படுவதாகக் கூறுகின்றனர்.

சீன அரசாங்கம் தனது கடுமையான 'ஜீரோ-கோவிட்' நடவடிக்கைகளை நீக்க முடிவு செய்ததை அடுத்து, எரிப்பதற்காகக் கொண்டுவரப்படும் உடல்களின் எண்ணிக்கையைச் சமாளிக்க முடியாமல், சீனா முழுவதும் உள்ள தகனக் கூடங்கள் திணறி வருகின்றன என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அசோசியேட்டட் பிரஸ் செய்தி முகமையில் பணிபுரியும் பெய்ஜிங் பத்திரிகையாளர் டேக் காங், டோங்ஜியாவோ பகுதியில் கோவிட் இறப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட தகனக் கூடம் மற்றும் இறுதிச் சடங்கு மண்டபங்களைப் பார்வையிட்டார்.

பெய்ஜிங்கிலிருந்து காங் பேசுகையில், 'சவப்பெட்டிகள் தொடர்ந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டே இருந்ததால் ஒன்று அல்லது இரண்டு டஜன் பேர் வெளியே காத்துக்கொண்டிருந்தனர்," என்கிறார்.

இறுதிச் சடங்கு மண்டபங்களைச் சுற்றியிருந்த கடைக்காரர்களிடம் அவர் பேசியபோது, அங்கு தொடர்ந்து கூட்டம் அதிகரித்து வருவதாக அவர்கள் கூறினர்.

'வழக்கமாக ஒரு நாளுக்கு ஒன்று அல்லது இரண்டு டஜன் உடல்கள் எரியூட்டப்படுவதற்கு மாறாக தற்போது தினமும் 50 முதல் 100 உடல்கள் வரை எரியூட்டப்படுவதாக அங்கிருந்த ஒருவர் குறிப்பிட்டுக் கூறினார்," என்கிறார் காங்.

2.2 கோடிக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் பெய்ஜிங்கில் மட்டுமே இந்த இறுதிச் சடங்கு மண்டபங்கள் இப்படிப் பரபரப்பாக இல்லை. நாட்டின் வட கிழக்கிலிருந்து அதன் தென்மேற்கு வரை பல இடங்களில் இறப்பு எண்ணிக்கை யைச் சமாளிக்க தகனம் செய்யும் ஊழி யர்கள் போராடி வருவதாகத் தெரிவிக் கிறது ஏ.எஃப்.பி செய்தி நிறுவனம்.

பெய்ஜிங்கின் வடகிழக்கில் 700 கி.மீ. தொலைவில் உள்ள ஷென்யாங் நகரில், இறந்தவர்களின் உடல்கள் ஐந்து நாட்கள் வரை புதைக்கப்படாமல் விடப்படுவதாக ஓர் இறுதிச் சடங்கு மையத்தில் பணிபுரியும் ஊழியர் கூறினார். மேலும், 'தகனக் கூடங்கள் இங்கு முற்றிலும் நிரம்பியுள்ளன. இதுபோன்ற ஒரு வருடத்தை நான் பார்த்ததே இல்லை," என்கிறார் அந்த ஊழியர்.

அதேநேரம், கோவிட் இறப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு அதிகரித்துள்ளது என்பதை விவரிக்கவே முடியாது என்கிறார் காங்.

கடந்த திங்களன்று இரண்டு இறப்புகளும் செவ்வாயன்று ஐந்து இறப்புகளுமே கோவிட் காரணமாக ஏற்பட்டன என்கின்றனர் சீன அதிகாரிகள். கடந்த சில வாரங்களில் அதிகாரப்பூர்வமாக கொரோனா இறப்பு பதிவு செய்யப்பட்டது இதுவே முதன்முறை.

பொதுமக்களின் கடுமையான எதிர்ப்புகளுக்குப் பிறகு சில கடினமான கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளை டிசம்பரில் சீனா நீக்கியது. இதனால் குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட மக்கள்தொகை கொண்ட சீனாவில் மீண்டும் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.



### சீனா முழுவதும் உள்ள தகனக் கூடங்களில் என்ன நடக்கிறது?

டோங்கிஜாவோ நகருக்கு காங் சென்றுவந்த இரு நாட்களுக்கு பிறகும் சாலையில் இறந்தவர்களைத் தாங்கிச் செல்லும் வாகனங்கள் மற்றும் கார்கள் அணிவகுத்து நின்றதாக செய்தி வெளியிட்டது ராய்ட்டர்ஸ் செய்தி முகமை.



தொடர்ந்து தகனம் செய்யப்பட்ட உடல்கள் காரணமாகச் சூழ்ந்திருந்த புகைக்கு மத்தியிலும் டோங்கிஜாவோ பகுதிக்கு வெளியே சுமார் 30 வாகனங்கள் காத்துக்கிடந்தன. அங்கிருக்கும் தகனக் கூடங்களுக்கு வெளியே தங்களது அன்புக்குரியவர்களின் மிச்சங்களுக்காகக் காத்திருக்கும் குடும்ப உறுப்பினர்களைக் காண முடிகிறது.

சில தகன மேடைகளுக்கு காவல் துறையினர் பாதுகாப்பு வழங்கி வருவதாக ப்ளூாம்பெர்க் மற்றும் ஸ்கை நியூஸ் ஆகிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

'சமீபத்திய நாட்களில் கொண்டுவரப்பட்ட உடல்களின் எண்ணிக்கை முன்பைவிட பல மடங்கு அதிகம்" என்று சீனாவின் தென்மேற்கில் உள்ள சோங்கிங்கில் உள்ள ஒரு தகனக் கூடத்தின் ஊழியர் ஏ.எஃப்.பி-யிடம் கூறினார்.

அதுமட்டுமல்லாது, பல தகனக் கூடங்களில் உடல்களை வைப்பதற்கான குளிர்பதனக் கிடங்குகள் நிரம்பிவிட்டதாகக் கூறுகிறார் பெயரைத் தெரிவிக்க விரும்பாத ஊழியர் ஒருவர், 'இது கோவிட் தொடர்பானதா என்பது குறித்து எங்களுக்குத் தெரியவில்லை. அப்படியிருந்தால் இதுகுறித்து நீங்கள் பொறுப்பான தலைவர்களிடம் கேட்க வேண்டும்," என்கிறார்.

### வேகமெடுக்கும் கொரோனா பரவல்

'கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதாக பரிசோதனை முடிவினை பெற்ற தங்களது உறவினர்கள் இறந்துவிட்டதாகக் கூறும் நபர்களிடம் பேசினேன். இதில் கவனிக்கப்படவேண்டியது என்னவென்றால், அவர்கள் குறிப்பிட்ட காலகட்டத்தில் கோவிட் காரண மாக எந்தவித அதிகாரப்பூர்வ இறப்பும் பதிவுசெய்யப்பட வில்லை. கோவிட் இறப்புகளை சீனா கணக்கிடும் விதம் கொஞ்சம் தந்திரமானது," என்று காங் கூறினார்.

2019இன் பிற்பகுதியில் வுஹான் நகரில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தொடங்கி யதில் இருந்து சீனா 5,242 கோவிட் இறப்புகளையே பதிவு செய்துள்ளது. இது உலகளாவிய கணக்கின்படி மிகக் குறைவான இறப்பு எண்ணிக்கை ஆகும்.

ஆனால், கோவிட் பாதிப்புக்குப் பிறகு நிமோனியா அல்லது சுவாசக் கோளாறு ஆகியவற்றால் இறப்பவர்களின் கணக்கு மட்டுமே கோவிட் இறப்புகளாகக் கருதப்படும் எனச் சீன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

'கோவிட் பாதிக்கப்பட்ட பின் மாரடைப்பு அல்லது இதய நோய் ஏற்பட்டு இறப்பு ஏற்பட்டால் அது கோவிட் இறப்பு என்ற வகைப்பாட்டில் வராது" என்று பீக்கிங் பல்கலைக்கழக தலைமை மருத்துவமனையின் தொற்று நோய் பிரிவு தலைவர் வாங் குய்கியாங் கூறினார்.

தற்போதைய கோவிட் அலைக்கு மத்தியில் வைரஸின் புதிய கொரோனா வைரஸ் திரிபுகள் உருவாகக் கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்ததாக அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

'வைரஸின் பரவும் திறன் மற்றும் உயிரிழப்பை ஏற்படுத்தும் திறன் ஆகிய இரண்டும் ஒரே சமயத்தில் அதிகரிக்கும் என்பது ஒப்பீட்டளவில் சாத்தியமில்லை" என்று சீன நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் அதிகாரி சூ வென்போ கூறினார்.

கட்டாய கொரோனா பரிசோதனை விதிமுறை தளர்த்தப்பட்டதால் சீனாவின் கோவிட் தொற்று எண்ணிக்கையைக் கண்காணிப்பது கடினமாக்கியுள்ளது, எத்தனை பேர் நோய் வாய்ப்பட்டுள்ளனர் என்பதைக் கணக்கிடுவது இப்போது சாத்தியமற்றது என்று அதிகாரிகள் கடந்த வாரம் ஒப்புக்கொண்டுள்ளனர்.

'இறுதிச் சடங்கு ஒன்றிலிருந்தவர்களில் ஒருவர் இறப்புச் சான்றிதழில் மரணத்திற்கான காரணம் கோவிட் எனக் குறிப்பிடப்படாமல் நிமோனியா என்று குறிப்பிடப்பட்டிருந்ததாகக் கூறினார்" என்று காங் கூறினார்.

### 2023-ல் பத்து லட்சம் இறப்புகள் எனக் கணிப்பு

இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹெல்த் மெட்ரிக்ஸ் அண்ட் ஏவல்யூவேஷன் (ஐஉஆநு) எனும் நிறுவனத்தின் புதிய கணிப்பின்படி, கோவிட் கட்டுப்பாடுகள் திடீரென நீக்கப்படுவதால் 2023ஆம் ஆண்டு அதிக பரவல் ஏற்பட்டு உலகளவில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட இறப்புகள் ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

IHME என்பது அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் உள்ள ஒரு சுயாதீனமான உலகளாவிய சுகாதார ஆராய்ச்சி மையமாகும்.

ஏப்ரல் 1, 2023க்குள் 3,22,000 இறப்புகள் வரை ஏற்படும் என்றும், அதே தேதியில் நோய்த்தொற்று உச்சத்தை எட்டும் என்றும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், ஏப்ரல் மாதத்திற்குப் பிறகும் பரவல் தொடர்ந்து இருக்கும் என ஆய்வு கணித்துள்ளது.

'சீனாவின் பூஜ்ஜிய-கோவிட் கொள்கையானது வைரஸின் முந்தைய திரிபுகளைக் கையாள்வதில் பலனளித்தது. ஆனால், ஒமிக்ரான் வகை திரிபுகளில் இது அதிக பலன் தராது," என்று IHME இயக்குநர் கிறிஸ்டோபர் முர்ரே கூறுகிறார்.

ஹாங்காங்கில் சமீபத்தில் ஏற்பட்ட ஒமிக்ரான் பரவல் குறித்த தரவுகளின் அடிப்படையில் இந்த கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'வுஹானில் ஏற்பட்ட முதல் அலையின் போது பெரிய அளவில் இறப்புகள் எதுவும் பதிவு செய்யப்படாததால், இறப்பு விகிதம் குறித்த தகவல்களைப் பெற ஹாங்காங்கை தேர்ந்தெடுத்தோம்," என்கிறார் முர்ரே.

ஆனால் சீன மருத்துவமனைகள், அடுத்த அலை குறித்து இப்போதைக்கு அச்சப்படவில்லை என்றே தோன்றுகிறது.



பெய்ஜிங்கில் மருத்துவமனை ஒன் றைப் பார்வையிட்ட காங், 'பெரிய கூட்ட நெரிசலுக்கான அறிகுறிகள் எதுவும் இங்கு காணப்படவில்லை.

ஆனால் நிச்சயமாக, பெய்ஜிங்கை வைத்து மட்டும் சீனாவின் ஒட்டுமொத்த நிலையைக் கணக்கிட முடியாது. ஏனென்றால், ஒட்டுமொத்த சீனாவிலும் சிறந்த மருத்துவ கட்டமைப்புகளைக் கொண்டது பெய்ஜிங்தான்," என்கிறார். (பிபிசி)

# சிங்கள சமூகமும் சாதிப் பாகுபாடும்!

**திருமகள்**

சிங்கள எழுத்தாளரான எம்எல்டி மகிந்தபால தீவிர சிங்கள - பௌத்த தேசியவாதி. இவரின் கருத்துப்படி தமிழ்ச் சமூகத்தில் சாதி வேற்றுமை பூதாகாரமாக ஊன்றியிருப்பதாகவும் வெள்ளாளர்கள் மற்ற சாதியினர் மீது அரசியல், பொருளாதார, சமூக தளங்களில் ஆதிக்கம் செலுத்துவதாகவும் ஐலண்ட் நாளேட்டில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார். ஆனால் சாதிச் சிக்கல் தமிழ்ச் சமூகத்துக்கு மட்டும் உரியதல்ல. இந்தச் சிக்கல் தமிழ் சமூகத்தில் இருப்பது போல சிங்கள சமூகத்திலும் வேருன்றி இருக்கிறது. காரணம் இந்து மதத்தின் செல்வாக்கே ஆகும்.

சிங்கள இனம் ஒரு கலப்பினம் ஆகும். இலங்கையின் பூர்வீக குடிகளான நாகர், இயக்கர், இராட்சதர், தேவர் போன்ற இனத்தவரே நாளடைவில் சிங்களவர்களாக உருவெடுத்தனர். வேடர் விதிவிலக்கு. அவர்கள் தங்கள் தனித்துவத்தை இன்றும் காப்பாற்றி வருகிறார்கள். குவேனி இயக்கர் குலப் பெண் என்று மகாவம்சம் கூறுகின்றது. இராவணன் இராட்சத குல மன்னன் என எண்ணப்படுகிறான்.

இன்றைய சிங்கள இனத்தவர் ஆதி காலத்தில் இந்துக்களாக இருந்து பின்னர் பௌத்த மதத்துக்கு மாறியவர்கள். மனுதர்மம் போன்ற நூல்கள் முற்பிறப்பில் செய்த வினைப் பயனே சாதியில் மேலோனாகவும் கீழோனாகவும் பிறப்பதற்குக் காரணமென்ற சித்தாந்தத்தை கொண்டவை. இலங்கையில் பௌத்தமானது அதன் முற்போக்குத் தன்மையை இழந்து இந்துத்துவ சிந்தனைமுறையைப் பின்பற்றுகிறது. றதல, கொய்கம ஆகிய ஆதிக்க சாதிகள் தங்களை உயர் சாதியரெனப் பிரகடனப்படுத்த இந்த சித்தாந்தம் உதவுகிறது.


சிங்கள் சமூகத்தில் பல்வேறு வகை சாதிப் பிரிவுகள் காணப்படுகின்றன. அதில் மிக உயர்ந்த சாதியினராக ‘றதல’ எனும் சாதி இருக்கிறது. இச்சாதியினரே அரச வம்சத்தினருக்கு நெருக்கமாக இருந்துவந்துள்ளனர். கண்டி இராச்சியத்தின்போது சிங்கள சமூகத்தில் செல்வாக்கான நிலையில் இருந்து கொண்டு ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். முன்னாள் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க இந்தச் சாதியைச் சேர்ந்தவர்.

இரண்டாம் இடத்தில் ‘கொய்கம’ எனும் சாதிப்பிரிவினர் காணப்படுகிறார்கள். இவர்கள் சிங்கள சமூகத்தில் 50 விழுக்காட்டினர் ஆவர். அரசனுக்கு சேவகம் செய்து வந்தவர்களாகவும் பிற்பாடு அவர்களின் செல்வாக்கின் பயனாக விவசாய ஆதிக்கம் இவர்களிடமே இருந்துவந்துள்ளது. சிங்களவர்கள் மத்தியில் ஆதிக்க சாதியான கொய்கம இன்றுவரை இலங்கையின் அரசியல் - பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது. விதி விலக்காக சாதி அடுக்கில் மிகவும் பிற்பட்ட இடத்தில் இருந்த ரணசிங்க பிரேமதாச 1988 இல் இலங்கையின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அடுத்து ‘கரவா’ (கரையோரப் பகுதிமக்கள்) ‘பத்கம’ (கொய்கம சாதியினருக்கு சேவகம் செய்பவர்கள்) ‘வக்கும்புர’ (சக்கரைத் தொழில்) எனும் சாதிப்பிரிவினர் இடைப்பட்ட சமூக தட்டில் இருக்கும் சாதியினராகும்.

சிங்களச் சமூகத்தின் விளிம்பு நிலைச் சமூகமாக இருப்பவர்கள் ‘கின்னர’ (காட்டிலுள்ள மூலப்பொருட்களை பயன்படுத்தி பாய்போன்ற கைப்பணிப் பொருட்களை செய்பவர்கள்) ‘கஹல’ (குற்றவாளிகளுக்கு மரணதண்டனையை நிறைவேற்றுவோர்) ‘றொடியா’ (துப்பரவுப்பணி புரிபவர்கள்.) மற்றும் ‘நவன் தன்ன’ (கொல்லர்) ‘கும்பல்’ (குயவர்) ‘படு’ (சலவைத்தொழில்) ‘துறாவ’ (சீவல் தொழில்) ‘சலாகம’ (கறுவாத்தொழில்) ‘பெறவா’ (பறைமேளம் அடிப்பவர்கள்) ஆகியோர் ஆவர்.

இலங்கையில் சிங்கள (பௌத்த மத) சாதியத்தைப் பற்றிக் குறிப்பிடும் மிகவும் பழமைவாய்ந்த மானுடவியல் நூலான ‘ஜனவங்சய”வில் 26 சாதிகள் குறிப்பிடப்படுகிறது. மத்தியகால இலங்கையில் இருந்ததாகச் சொல்லப்படும் சாதிகள் 17ஐ ஜே.டி.லெனரோல் குறிப்பிடுகிறார். பேராசிரியர் நந்ததேவ விஜேசேகர எழுதிய ‘இலங்கை மக்கள்” எனும் நூலில் 43 சாதிகளின் பட்டியலைக் குறிப்பிடுகிறார்.



அஹிங்குந்தய (நாடோடிகள்), பட்டஹல - (குயவர்), பத்கம - பாரம்பரிய விவசாயிகள் (பிரித்தானிய ஆட்சியின் போது இவர் கள் பல்லக்குத் தூக்கிகளாக அழைக்கப் பட்டிருக்கிறார்கள்), பெராவ (பறைய டிப்பவர்)கொய்கம (பாரம்பரிய கமக் காரர்கள் மற்றும் பண்ணையாளர்கள்), ஹாலி (நெசவாளர்கள்), ஹன்னாலி (தையற்காரர்), ஹூனு (சுன்னக்கல் செய்பவர்கள்), கின்னரய (பாய் பின்னுபவர்கள்), நவந்தன்ன (பொற்கொல்லர்), பமுனு (கூலி விவசாயிகள்), பன்ன (புல்வெட்டுவோர்), அம்பெட்ட (முடி திருத்துவோர்), பட்டி (கால்நடை வளர்ப்போர்), பொரவக்கார (மரம் தறிப்போர்), றதல (நிலப்பிரபுக்கள்-குறிப்பாக கண்டி இராச்சிய காலத்தில்), ராஜக்க, ஹேன (சலவைத்தொழிலாளர்கள்), றொடியா (தாழ்த்தப்பட்டோர்), வக்கும்புர (ஹக்குறு - கருப்பட்டி தயாரிப்பாளர்கள்), கராவ (பாரம்பரிய மீன்பிடித் தொழில் செய்வோர்), துராவ (பாரம்பரிய படைவீரர் - காலனித்துவத்திற்குப் பின் கள் இறக்குவோர்), கட்டர (விவசாயிகள்), தெமல கட்டர (தமிழ் தாழ்த்தப்பட்டோர்), பட்டஹல (கும்பள் - குயவர்), ஹன்னலி (தையற்காரர்), ஹின்ன (சலாகம சாதியனருக்கான சலவைத்தொழிலாளர்), ஹாலி (நெசவு, ஐரோப்பியர் காலத்தில் கருவா தொழில்), கஹல (கொலைத் தண்டனை நிறைவேற்றுவோர், சுத்திகரிப்போர்), கின்னர (பாய் பின்னு வேர்), ரதா (உயர்சாதியினருக்கு உடைதுவைப்போர்), ஹின்ன (மாவு சலிப்போர்), சலாகம (கருவா செய்கையில் ஈடுபடுவோர்),



சிங்கள சாதியமைப்புக்கும் தமிழ் சாதியமைப்புக்கும் சில ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம்.

கரவ, துரவ, சலகம போன்ற சிங்கள சாதிகள், தென்னிந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்கள் என்பதற்கான வரலாற்று சான்றுகள் உள்ளன. பண்டார நாயக்கவின் மூதாதையர் கூட, தமிழ்நாடு மற்றும் கேரளம் இரண்டிலும் இருந்து வந்தவர்களே. நாயக்க என்ற பின்னொட்டு பெயர்களைக் கொண்டோர் தமிழ் பின்னணியைக் கொண்டவர்களே. பண்டாரநாயக்கா, ஜெயவர்த்தன உட்பட அதிதீவிர சிங்கள - பௌத்தர்கள் தமிழ்ப் பரம்பரையில் வந்தவர்கள். இவர்களே சிங்கள - பௌத்த தேசியத்தை உருவாக்கியவர்களில் முன்னிலை வகித்தார்கள்.

> **சிங்களவர்களின் மத்தியில் இன்றைக்கும் காணப்படும் ஒவ்வொரு சாதியும் தனக்கென தனியான வரலாற்றைக் கொண்டுள்ளது. சிங்கள சாதிகள் எல்லாமே தென்னிந்தியாவை பூர்வீகமாக கொண்டுள்ளன.**

துறாவ வகுப்பினர் கேரளத்து ஈழவர், தமிழ்நாட்டு நாடார் வகுப்பினரோடு ஒத்தவர்கள். முன்னாள் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர துறாவ வகுப்பைச் சேர்ந்தவர் ஆவர்.

கரவா, சலாகம, துறாவ சாதியினர் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் தமிழ்நாடு மற்றும் இன்றைய கேரள (சேரநாடு) நாடுகளில் இருந்து கொண்டு வந்து தென்னிலங்கையில் குடியேற்றப்பட்டவர்கள். இவர்களில் பெரும்பான்மை மீனவ சாதியினர். சிறுபான்மை படையினர்.

சிங்களவர்களின் மத்தியில் இன்றைக்கும் காணப்படும் ஒவ்வொரு சாதியும் தனக்கென தனியான வரலாற்றைக் கொண்டுள்ளது. சிங்கள சாதிகள் எல்லாமே தென்னிந்தியாவை பூர்வீகமாக கொண்டுள்ளன.

அஸ்கிரியா - மல்வத்தை பௌத்த பீடங்கள் கொய்கம தவிர்ந்த ஏனைய சாதியினரை சங்கத்தில் சேர்ப்பதில்லை. இதனால் கரவா, சலாகம மற்றும் துவார சாதிகளைச் சேர்ந்தவர்கள் மைனமார் சென்று குருப்பட்டம் சூட்டிக் கொண்டார்கள். இவர்கள் அமரபுர என்ற பௌத்த மத பீடத்தை நிறுவினார்கள். இந்த சாதியினர் சிலர் சாதிப் பாகுபாடு காரணமாக கிறித்தவர்களாக மாறினார்கள்.

கொய்கம சாதிப் பிரிவுக்கு அடுத்ததாக உள்ள கரவா அல்லது மீனவ சாதியினர். இவர்களை தென்னிலங்கை கரையோரப் பகுதிகளில் செறிந்து வாழ்கிறார்கள். மொத்த சிங்கள மக்களது தொகையில் 10 விழுக்காட்டினர் இந்த சாதியைச் சேர்ந்தவர்களே. இவர்கள் நீர்கொழும்பு, புத்தளம், வென்னப்புவ, கொழும்பு வடக்கு, மொறட்டுவா, பாணந்துறை போன்ற நகரங்களில் செறிந்து வாழ்கிறார்கள்.

பௌத்த மதம் சாதி பாராட்டுவதில்லை. புத்தர் தனது காலத்தில் சகல சாதியினரையும் சங்கத்தில் சேர்த்துக் கொண்டார். பிறப்பு என்பது அவனவன் செய்த தீவினை நல்வினை என்ற இருவினைப் பயனாக தீர்மானிக்கப் பட்டுவிட்டன என்ற கருத்தாக்கங்களை புத்தர் நிராகரித்தார். “ஒருவன் தன் பிறப்பால் பிராமணனாகவோ விலக்கப்பட்டவனாகவோ மாறுவதில்லை. அவனது நடத்தையே அவனது குணத்தைத் தீர்மானிக்கின்றது. நடத்தை மட்டுமே முக்கியம்” என்றார். புத்தரின் கருத்து திருக்குறளிலும் காணப்படுகிறது.

பௌத்தம் காரணமாக சிங்களவர்களிடையே நிலவும் சாதியம் தமிழர்களிடையே நிலவும் சாதியம் போல் இறுக்கமாக இல்லை. தமிழ்ச் சமூகத்தில் இருப்பது போல சிங்கள சமூகத்திடையே சாதி அடிப்படையில் உயர்வு தாழ்வு இருந்தாலும் தீண்டாமை இல்லை. பௌத்த கோயிலுக்குள் எல்லோரும் அனுமதிக்கப்படுகிறார்கள். பள்ளிக்கூடங்களிலும் அனைத்து சாதியினரும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இருந்தபோதிலும் திரும ணம் என்று வரும்போது சாதி பார்க்கும் வழக்கம் தமிழர்களிடம் இருப்பது போன்று சிங்கள சமூகத்திலும் காணப்படுகிறது. தேர்தல் காலங்களில் சாதியப் பாகுபாடுகளின் அடிப்படையில் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவதையும் வாக்குச்சேகரிப்பு நிகழ்வதையும் காணலாம்.

ஒரு காலத்தில் கண்டிச் சிங்களவர்கள் கரையோரச் சிங்களவர்களை மணம் செய்து கொள்வதில்லை. ஏன் சிங்களவர் என்றே கரையோரச் சிங்களவர்களை சொல்வதில்லை. இன்று கண்டிச் சிங்களவர் கரையோரச் சிங்களவர் என்ற பாகுபாடு அடியோடு இல்லாது போய் விட்டது.

சாதியமைப்பின் ஊற்றுக்கண் வர்ணாசிரம தர்மமே. வருணாசிரம கோட்பாட்டின்படி பிராமணரே உயர்ந்தவர்கள். அடுத்து ஷத்திரியர்களும், வைசியர்களும் நான்காவதாக சூத்திரர்களும் வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த வருண அமைப்பே பின்னர் அவரவர் செய்யும் தொழில் அடிப்படையில் நூற்றுக் கணக்கான சாதிகள் உற்பத்தி செய்யப்பட்டன. அப்படி உற்பத்தி செய்யப்பட்ட பின்னர் அது பிறப்பின் அடிப்படையில் அமைந்துவிட்டது. முன்னைய காலங்களில் வேளாளர் என்போர் பயிர்த் தொழில் செய்தார்கள். இன்று அவர்களில் பெரும்பான்மை வேறு வேறு தொழில் செய்கிறார்கள். இருந்தும் பிறப்பின் அடிப்படையில் வந்த சாதி தொடர்கிறது.

மொத்தம் 443 ஆண்டு கால காலனித்துவ ஆட்சி, பொருளாதார உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள், எல்லோரும் கல்வி கற்கும் வாய்ப்பு, போக்குவரத்து போன்ற காரணிகளால் சாதிக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. சில சாதிகள் வழக்கொழிந்து போயின. சில சாதிகள் புதிதாகப் புகுந்து கொண்டன. தகப்பன் செய்த தொழிலை மகன் செய்ய வேண்டும் என்ற நியதி பேரளவு குறைந்து விட்டது.

எம்எல்டி மகிந்தபால போன்ற தீவிர - சிங்கள பௌத்த தேசியவாதிகள் கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல் எறியக் கூடாது. சாதி பாகுபாட்டில் தமிழ் - சிங்கள சமூகங்கள் இரண்டுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல.

# உள்ளூராட்சி தேர்தலை நடத்தினால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும்!

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, டிசெ. 23

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 50 சதவீதத்தால் குறைக்கும் தீர்மானத்தை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். அரச சேவைக்கு தேவையான நிதியை திரட்டிக் கொள்வது பெரும் போராட்டமாக உள்ள நிலையில் தேர்தலை நடத்தினால் பொருளாதார பாதிப்பு மேலும் தீவிரமடையும் என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராக உள்ளோம். ஆனால், நாடு என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராக இருக்கிறோமா என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு செயல்படும் நிலை தற்போது கிடையாது.

8,800 ஆக உள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 50 சதவீதத்தால் குறைக்கும் திட்டத்தை நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். தற்போதைய நிதி நெருக்கடிக்கு மத்தியில் 8,800 உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பது அத்தியாவசியமானதாகும்.

சேவைக்கு தேவையான நிதியை திரட்டிக் கொள்வது பெரும் போராட்டமாக உள்ள பின்னணியில் தேர்தலை நடத்தினால் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையும். தற்போதைய வாழ்க்கை செலவுக்கு அமைய தேர்தல் ஒன்றை நடத்த குறைந்தது 20 பில்லியன் ரூபாய்க்கும் அதிக நிதி செலவாகும் என்பதை எதிர்க்கட்சியினர் நன்கு அறிவார்கள்.

அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல இருப்பினும் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்திற்காக தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகிறார்கள். தேர்தலை நடத்துவதால் ஒன்றும் மாற்றமடைய போவதில்லை. பொருளாதார பாதிப்பு மென்மேலும் தீவிரமடையும், அதன் சுமை மக்கள் மீதே சுமத்தப்படும். ஆகவே எதிர்க்கட்சியினர் யதார்த்த நிலையை புரிந்துக் கொண்டு பொறுப்புடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# நுவரெலியாவில் ரணில்!



கொழும்பு, டிசெ. 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக் கிழமை நுவரெலியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

ஜனாதிபதியை இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். ராமேஸ்வரன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் வரவேற்றனர்.

இதேவேளை, நேற்று நுவரெலியா மாவட்ட நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, நுவரெலியா மாவட்டத்தில் பட்டிப்பொல - பொரலந்தவுக்கும் இடையில் கேபிள் கார் திட்டத்தை ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

உலக முடிவைப் பார்வையிடும் வகையில், இந்த கேபிள் கார் திட்டத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

# போலி கால்நடை மருத்துவர்கள் மக்கள் அவதானமாக செயல்படவும்!

வடக்கு விவசாய அமைச்சு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 23

கால்நடைகளுக்கு சட்ட விரோதமான முறையில் சிகிச்சை மேற்கொள்ளும் போலி கால்நடை மருத்துவர்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக செயல்பட வேண்டும். அத்துடன், அவர்கள் தொடர்பான தகவல்களை வடக்கு விவசாய அமைச்சுக்கு அறியத் தருமாறு அமைச்சின் செயலாளர் அ. சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் அரச கால்நடை மருத்துவர் எனும் பெயரில் போலியான நபர்கள் கால்நடைகளுக்கும் வீட்டுப் பிராணிகளுக்கும் சட்டவிரோதமாக சிகிச்சைகளை மேற்கொண்டு பெருமளவு நிதி மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களால் மேற்கொள்ளப்படும் தவறான சிகிச்சைகளால் பெறுமதி மிக்க கால்நடைகள் பெருமளவில் இறந்துள்ளன என்று அந்த மாவட்டங்களின் பண்ணையாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மாவட்ட அலுவலகங்களுக்கும் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளார்கள்.

போலிக் கால்நடை மருத்துவர்கள் தொடர்பாக பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும். அத்துடன், போலி நபர்களால் ஏமாற்றப்பட்டு ஏற்கனவே தமது கால்நடைகளையும் நிதியையும் இழந்தவர்களும் தற்போது அவ்வாறன வர்களின் தகவல்களை அறிந்தவர்களும் அவர்கள் தொடர்பான விபரங்களை உடனடியாக "செயலாளர், வடக்கு மாகாண விவசாய அமைச்சு, இல: 655, நாவலர் வீதி", வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-03)

கல்வி tv CHANNEL-1

**23.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**23.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தேர்தல் பிற்போடப்படுவதனால் ஜனநாயகத்துக்கு கடும் பாதிப்பு

## கபே அமைப்பு சுட்டிக்காட்டு



மட்டக்களப்பு, டிசெ. 23

உள்ளூராட்சி தேர்தல்கள் பிற்போடப்பட்டு அதன் அதிகாரங்கள் ஆணையாளர்கள், செயலாளர்களுக்கு வழங்கப்படுவதனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் நிலைமை தொடர்ச்சியாக தாமதிக்கப்படுகின்றது. இது ஜனநாயகத்துக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் உறுப்பினர்கள்,மகளிர் சிவில் சமூக ஆர்வலர்களுக்கான டிஜிற்றல் அறிவினை மேம்படுத்தும் வகையில் முன்னெடுக்கும் ஜனனி வேலைத்திட்டத்தின் இறுதி நிகழ்வு மட்டக்களப்பு ஏறாவூர் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

கபே அமைப்பு கடந்த ஒரு வருட காலமாக ஜனனி டிஜிற்றல் அறிவை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தை 15 மாவட்டங்களில் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. இதன் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், மகளிர் சிவில் சமூக ஆர்வலர்களுக்கான செயலமர்வு கடந்த மூன்று மாதங்களாக ஏறாவூர் நகரசபை மண்டபத்தில் நடைபெற்று இறுதி நிகழ்வுடன் நேற்று நிறைவு பெற்றது.

இந்த வேலைத்திட்டம் தொடர்பான ஊடக சந்திப்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் மக்கள் இயக்கமான கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன், வளவாளராக கலந்துகொண்ட தேர்தல் கற்கைகளுக்கான ஐரேஸ் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க மற்றும் உள்ளூராட்சிமன்ற பெண் பிரதிநிதிகள் என பலர் கருத்து தெரிவித்தனர்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த நிறைவேற்றுப் பணிப்பாளர்-

உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள 80 வீதமான பெண்களுக்கு டிஜிற்றல் அறிவு தொடர்பான தேவைப்பாடு உள்ளது. அதிலும் 75 வீதமானவர்கள் தனக்கான மின்னஞ்சல்கூட இல்லாதவர்களாகவுள்ளனர்.

இதேபோன்று சமூக ஊடகம் தொடர்பான அறிவுகள் குறைவானவர்களாகவே உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே ஜனனி வேலைத்திட்டம் ஊடாக டிஜிற்றல் ஊடகம் தொடர்பான தெளிவுபடுத்தல்களை கபே முன்னெடுத்து வருகின்றது.

தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கும்போது சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்,அந்த சமூக ஊடகங்கள் மூலம் தேர்தல் வெற்றியை நோக்கி எவ்வாறு பயனிக்க முடியும் என்பது தொடர்பில் பல்வேறு விடயங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் மற்றும் மாகாணசபை தேர்தல்களை பொறுத்த வரை உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான காலம் கடந்து ஒரு வருட நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று இலங்கையில் உள்ள மாகாண சபைகளின் காலம் கட்டம் கட்டமாக முடிவடைந்தாலும் கிழக்கு மாகாண சபையின் காலம் முடிவடைந்து பல ஆண்டுகளை கடந்துள்ள போதிலும் அது தொடர்பாக பேசப்படுதில்லை.

மாகாண சபை பொருத்த மற்றது என்று கருதினால் தேர்தல் முறைமையிலிருந்து அகற்ற நடவடிக்கையெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந்த மாகாண சபையின் தேர்தல்களை பிற்போடாமல் உடனடியாக நடத்தவேண்டும். - என்றார். (அ)

## தமிழக ஓவியர் கிழக்கு விஜயம்



அம்பாறை, டிசெ. 23

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அழைப்பில் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்திருக்கும் உலகப்புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

அவர் கடந்த 20ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக கட்புலகற்கைகள், தொழில்நுட்பத்துறை 1ஆம் வருட மாணவர்களுக்கு ஓவியங்கள் தொடர்பான அறிமுகம் என்னும் தலைப்பில் கலந்துரையாடலுடனான பயிற்சி வகுப்பு நடத்தினார்.

இந்நிகழ்வில் விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி, கட்புலகற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சீவரெத்தினம், மற்றும் விரிவுரையாளர்கள், அம்பாறை மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜீ, கிழக்கு மாகாண பிராந்திய அலுவலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## வவுணதீவில் இராணுவத்தின் விவசாய அறுவடை நிகழ்வு

மட்டக்களப்பு, டிசெ. 23

மட்டக்களப்பு, வவுணதீவில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த சேதன விவசாய பண்ணையின் அறுவடை நிகழ்வு 231ஆம் படைப் பிரிவின் பிரிகேடியர் திலுப பண்டாரவின் தலைமையில் பாவற்கொடிச்சேனை சிப்பிமடு பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த பண்ணையின் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் கேணல் ஜே.ஏ.பீ.குணரெட்ணவினால் விவசாய அறுவடைகள் வவுணதீவு பிரதேச செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் வீ.பேரின்பராசா ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.



## கல்முனை றோட்டரி கழகத்தினால் மாணவருக்கு அப்பியாசக் கொப்பி

அம்பாறை, டிசெ. 23

கல்முனை றோட்டரி கழகம் கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு ஆயிரம் அப்பியாச கொப்பிகளை வழங்கியது .

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் எஸ்.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்முனை றோட்டரி கழகத்தின் புதிய தலைவர் றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் , சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, றோட்டரி கழக முன்னாள் தலைவர் றோட்டரியன் எஸ். புஷ்பராஜா ,பொதுச் செயலாளர் றோட்டரியன் எம் சிவபாதசுந்தரம், உறுப்பினர் றோட்டரியன் நாசர் ஆகியோருடன் கோரக்கர் ஆலய உப தலைவரும் ,பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளருமான வி. மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆயிரம் அப்பியாச கொப்பிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (அ)

## கல்முனை வைத்திய சாலையில் 74 புலமையாளர்கள் கௌரவிப்பு



அம்பாறை, டிசெ. 23

கல்முனை ஆதாரவைத்திய சாலையில் சேவையாற்றும் ஊழியர்களது சாதனை படைத்த 74 பிள்ளைகள் பாராட்டி கௌர விக்கப்பட்டனர்.

தரம் 5 க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர் தரம் ஆகிய பொதுப் பரீட்சைகளில் காட்டிய சாதனைகளைக் கௌரவிக்கும் முகமாக இப் பாராட்டு விழா நடைபெற்றது.

கல்முனை ஆதார வைத்திய சாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட புலமையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

இதில் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் சிறப்பு சாதனை படைத்தமைக்காக பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக பிரதி வைத்திய அத்தியட்சகர்களான மருத்துவர் சா. இராஜேந்திரன், மருத்துவர்.ஜே. மதன், வைத்தியசாலையின் கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் போது 74 புலமையாளர்கள் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# கல்முனை பஸ் நிலையத்தில் தரிப்புக் கட்டணம் அறவீடு

அம்பாறை, டிசெ. 23

கல்முனை பிரதான பஸ் நிலையத்தில் இருந்து சேவை யில் ஈடுபடும் பயணிகள் போக்குவரத்து பஸ்களுக்கு தரிப்புக் கட்டணம் அறவிடும் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இத்திட்டம் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று முன் தினம் புதன்கிழமை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், வருமானப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.ஏ.அஹத், தனியார் போக்குவரத்து அதிகார சபையின் கல்முனை நிலைய பொறுப்பாளர் ஏ.எம்.கரீம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கல்முனை மாநகர சபையின் பொதுச் சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இக்கட்டணம் அறவிடும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் பிரகாரம் கல்முனை பிரதான பஸ் நிலையத்திற்கு வந்து செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபையின் கல்முனை பஸ் டிப்போவுக்குரிய பஸ்களைத் தவிர ஏனைய அனைத்து இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களுக்கும் இக்கட்டணம் அறவிடப்படவுள்ளது.

குறுந்தூர பயணத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு ஒவ்வொரு தடவையும் 100 ரூபாவும் நெடுந்தூர பயணத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு 200 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

(அ)

# ஒரு சகோதர தேசமாகவே உக்ரைனைப் பார்க்கிறேன்

## விளாடிமிர் புடின் கருத்து

மொஸ்கோ, டிசெ. 23

உக்ரைனில் நடந்த போருக்கு ரஷ்யா காரணம் அல்ல என தெரிவித்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின், உக்ரைனை ஒரு சகோதர தேசமாகவே தொடர்ந்து பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.



மூத்த இராணுவ அதிகாரிகளுடன் தொலைக்காட்சியில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உக்ரைனுடனான மோதல், மூன்றாம் நாடுகளின் கொள்கையின் விளைவு என்று ஜனாதிபதி புடின் சாடினார்.

உக்ரைனில் தொடங்கி சோவியத்துக்கு பிந்தைய குடியரசுகளை மேற்கு நாடுகள் மூளைச்சலவை செய்துள்ளதாக ஜனாதிபதி புடின் தனது உரையின்போது கூறினார்.

மேலும், இப்போது நடப்பது ஒரு சோகம் என்றாலும் அது தங்களின் தவறு அல்ல என புடின் குறிப்பிட்டார்.

கடன்கள் மற்றும் மலிவான எரிசக்தியை வழங்கி, அண்டை நாடுகளுடன் உறவுகளை உருவாக்க முயற்சித்த போதும், அது பலனளிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# உக்ரைன் ஒருபோதுமே தனித்து விடப்படவில்லை

## அந்நாட்டு ஜனாதிபதிக்கு பைடன் ஆறுதல்

நியூயோர்க், டிசெ. 23

ரஷ்யாவுடனான போரில் உக்ரைன் எப்போதும் தனித்து நிற்காது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.



ரஷ்ய படையெடுப்பு தொடங்கிய பின்னர் தனது முதல் வெளிநாட்டு பயணமான அமெரிக்கா சென்ற உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கி, நேற்று முன்தினம் புதன்கிழமை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதன்போது, உக்ரைனுக்கு அதிநவீன பேட்ரியாட் வான் பாதுகாப்பு ஏவுகணை, போர் விமானங்களில் பொருத்தப்படும் அதிநவீன குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் உட்பட மேலும் 2 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான இராணுவ உதவிகளுக்கான தொகுப்பை வழங்குவதாக பைடன் உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து, நடைபெற்ற கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த பைடன்-

சர்வதேச கூட்டணியை ஒன்றாக வைத்திருப்பது பற்றி எந்தக் கவலையும் இல்லை. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு இந்த கொடூரமான போரை நிறுத்தும் எண்ணம் இல்லை' என கூறினார்.

அமெரிக்காவின் ஆதரவுக்கு தனது நன்றியை செலென்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைனின் மிக முக்கியமான நட்பு நாடாக, அமெரிக்கா ஏற்கனவே 50 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மனிதாபிமான, நிதி மற்றும் பாதுகாப்பு உதவிகளை வழங்கியுள்ளது. இது மற்ற எந்த நாட்டையும் விட அதிகம்.

எங்கள் மதிப்புகள் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்க எங்களுக்கு உதவ உக்ரைனுக்கு காங்கிரஸ் கூடுதல் 45 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் என்று செலென்ஸ்கி, நம்பிக்கை தெரிவித்தார்.

குடியரசுக் கட்சியினர் ஜனவரியில் பிரதிநிதிகள் சபையின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவார்கள். ஆனால், உக்ரைனுக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என எச்சரித்துள்ளனர். காங்கிரஸில் மாற்றங்கள் இருந்தாலும், தனது நாட்டுக்கு இரு கட்சி ஆதரவு இருக்கும் என்று நம்புவதாக செலென்ஸ்கி, கூறினார்.

வெள்ளை மாளிகை கூட்டத்திற்குப் பிறகு, 44 வயதான உக்ரைனிய ஜனாதிபதி காங்கிரஸின் கூட்டு அமர்வில் உரையாற்றினார். அங்கு அவர் கைத்தட்டலுடன் வரவேற்கப்பட்டார்.

அவர் அமெரிக்க சட்டமியற்றுபவர்களிடம் தனது நாடு இன்னும் எல்லா முரண்பாடுகளுக்கும் எதிராக நிற்கிறது என்றும் அடுத்த ஆண்டு மோதலில் திருப்பு முனை என்றும் கணித்தார்.

உக்ரைன் ஒருபோதும் சரணடையாது என்று உறுதியளித்தாலும், அதற்கு மேலும் ஆயுதங்கள் தேவை என அவர் கூறினார். 'ரஷ்ய இராணுவம் முழுமையாக வெளியேற, மேலும் பீரங்கி மற்றும் குண்டுகள் தேவை,' என்று அவர் மேலும் கூறினார்.

அமெரிக்காவினால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு உதவித் தொகுப்பில் ஒரு புதிய பேட்ரியாட் ஏவுகணை அமைப்பு உள்ளது, இது உக்ரைன் தனது நகரங்களை ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களில் இருந்து பாதுகாக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# மீண்டும் சர்ச்சையில் சிக்கிய இம்ரான்கான்

இஸ்லாமாபாத், டிசெ. 23

பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் பதவியை இழந்த முன்னாள் பிரதமர் இம்ரான்கான், தற்போதைய பிரதமர் ஷபாஸ் ஷெரீப் அரசுக்கு எதிராக தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறார்.



மேலும் பாராளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வருகிறார்.

இந்த நிலையில் இம்ரான் கான் பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

அவர் பெண் ஒருவருடன் தொலைபேசியில் ஆபாசமாக உரையாடுவதும், தமது வீட்டுக்கு வரும்படி அந்த பெண்ணை அவர் வற்புறுத்துவது போன்ற குரல் பதிவை ஊடகவியலாளர் ஒருவர் யூரியூப்பில் வெளியிட்டுள்ளார். அந்த குரல்பதிவு சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக அரசியல் கட்சியினர் பலரும் இம்ரான் கானை கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர். இம்ரான் கான் இது குறித்து உடனடியாக எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

அதே சமயம் இம்ரான்கானின் நற்பெயரை கெடுப்பதற்காக போலியான குரல் பதிவு ஒன்றை அவரது அரசியல் எதிரிகள் வெளியிட்டுள்ளதாக அவரின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி மறுப்பு தெரிவித்துள்ளது. (அ)

# உக்ரைனில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் 2 கடற்படை தளங்கள் அமைக்கும் ரஷ்யா!

மொஸ்கோ, டிசெ. 23

உக்ரைனுடனான யுத்தத்தின் போது கைப்பற்றிய தெற்கு உக்ரைனில் உள்ள இரண்டு துறைமுக நகரங்களில் தனது கடற்படைக்கு ஆதரவாக தளங்களை நிறுவ ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் நாட்டின் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பின்போது ஷோய்கு ஒரு அறிக்கையில்,



பேர்ட்யான்ஸ்க் மற்றும் மரிப்போல் துறைமுகங்கள் முழுமையாக செயல்படுகின்றன. கடற்படையின் ஆதரவுக் கப்பல்கள், அவசரகால மீட்பு சேவைகள் மற்றும் கப்பல் பழுதுபார்க்கும் பிரிவுகளுக்கான தளங்களை அங்கு நிலைநிறுத்த திட்டமிட்டுள்ளோம் என தெரிவித்தார்.

மேற்கத்திய ஆதரவுடைய உக்ரைனில் நடத்தப்படும் தாக்குதலின் பின்னணியில் ரஷ்யா தனது இராணுவத் திறனையும் அணுசக்திகளின் போர் தயார்நிலையையும் தொடர்ந்து மேம்படுத்தும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடந்த புதன்கிழமை தெரிவித்தார். (அ)

# ஆர்ஜென்ரீனா நாணயத்தில் மெஸ்ஸியின் புகைப்படம்?

புனோஸ் அய்ரெஸ், டிசெ. 23

36 ஆண்டுகளுக்கு பிறகு உலகக்கிண்ண உதைபந்து தொடரில் கிண்ணத்தை வென்ற ஆர்ஜென்ரீனா அணித் தலைவர் மெஸ்ஸியின் புகைப்படத்தை, அந்நாட்டு நாணயத்தாளில் (ஆர்ஜென்ரின் பெசோ) வெளியிட ஆலோசனை நடப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆர்ஜென்டினாவின் நாணயமானது, 'ஆர்ஜென்ரின் பெசோ' என அழைக்கப்படுகிறது.




உலகக்கிண்ண காற்பந்து தொடரில் 36 ஆண்டுகளுக்கு பின் சம்பியன் கிண்ணம் வென்ற உற்சாகத்தில் ஆர்ஜென்ரினா உள்ளது. இதற்கு முன்னர் அந்த அணி 1978இல் அந்த அணி கிண்ணத்தை வென்றிருந்தது.

இதனால், ஆர்ஜென்ரினா உற்சாகத்தில் மிதக்கிறது. கிண்ணத்துடன் தாயகம் திரும்பிய அணித்தலைவர் மெஸ்ஸி, ஏஞ்சல் டி மரியா உள்ளிட்டோரை காண இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டனர். வீரர்கள் திறந்தவெளி பஸ்ஸில் ஊர்வலமாக வந்தனர்.

இந்நிலையில், உலகக் கிண்ணத்தை பெற்றுத்தந்த அணித்தலைவர் மெஸ்ஸியை கௌரவிக்கும் வகையில், ஆர்ஜென்ரினா நாணயத்தாள்களில் அவரது படத்தை அச்சிட அந்நாட்டு ரிசர்வ் வங்கி ஆலோசித்து வருகிறது.

இது தொடர்பாக அந்நாட்டு நாளிதழ்கள் வெளியிட்ட செய்தியில், ஆர்ஜென்ரினா பணமதிப்பின்படி 1,000 பெசோ நாணயத்தாளில் படத்துடன், 1,000 என்பதை 'IO' என அச்சடிக்கவும், பயிற்சியாளர் லியோனல் ஸ்கலோனியை கௌரவிக்க, கரன்சியில், அவரது பெயரை குறிக்கும் "La Scaloneta" என்ற வார்த்தையை அச்சிடுவது குறித்தும் ஆலோசிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. (அ)



## 2026 உதைபந்து உலகக் கிண்ணம் 48 அணிகள் பங்கேற்கின்றன!

சென்னை, டிசெ. 23

எதிர்வரும் 2026இல் நடைபெறவுள்ள பிபா உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரை மூன்று நாடுகள் இணைந்து நடத்த உள்ளன. இந்தத் தொடரில் மொத்தம் 48 அணிகள் பங்கேற்க உள்ளன.

கடந்த ஞாயிறு கட்டாரில் நடைபெற்ற உதைந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா சம்பியன் வென்றது.

இந்த தொடர் அரபுநாடுகளில் முதல்முறையாக நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடராக அமைந்தது. கட்டார் நாடு முதன்முறையாக தொடரை சிறப்பாக நடத்தி முடித்துள்ளது. இந்நிலையில், எதிர்வரும் 2026 தொடரை அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய மூன்று நாடுகள் இணைந்து நடத்துகின்றன.

அமெரிக்காவில் 11, கனடாவில் 2 மற்றும் மெக்சிகோவில் 3 மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில், மொத்தம் 48 அணிகள் பங்கேற்கின்றன. ஒரு குழுவுக்கு 3 அணிகள் வீதம் 16 குழுக்களாக முதல் சுற்று போட்டிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிலிருந்து 32 அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும். 2026 ஜூன் மற்றும் ஜூலை வாக்கில் போட்டிகள் நடைபெறும் என தெரிகிறது. (ஐ)

### *எல். பி. எல். இருபது - 20:*

## வியாஸ்காந்த் அபார பந்துவீச்சு; யாழ்ப்பாணம் அணி இறுதியில்!

கொழும்பு, டிசெ. 23

வியாஸ்காந்தின் சிறப்பான பந்துவீச்சு காரணமாக எல். பி. எல். இருபது - 20 தொடரின் இறுதியாட்டத்துக்கு மூன்றாவது தடவையாக யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில்நேற்று முன்தினம் நடந்த போட்டியில் கண்டி பல்கன்ஸ் அணியை 24 ஓட்டங்களால் தோற்கடித்து இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளது.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த கண்டி பெல்கன்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.

144 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் கிங்ஸ் வேகமாகக் ஓட்டங்களை குவித்தது. 5.1 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 63 ஓட்டங்களை க் குவித்திருந்த போது மழைபெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது.

அப்போது டக்வேர்த் லூயிஸ் முறைமையின் பிரகாரம் 47 ஓட்டங்களை பெற்றாலே போதும் என்ற நிலையில் யாழ்ப்பாணம் கிங்ஸ் 16 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்தது.




மழை விட்டதும் மீண்டும் ஆட்டம் தொடர்ந்தபோது இரண்டாவது தடவையாகவும் மழை குறுக்கிட்டு ஆட்டம் தடைப்பட்டது.

அப்போது யாழ்ப்பாணம் கிங்ஸ் 11 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 98 ஓட்டங்களை பெற்றிருந்தது. ஆனால், டக்வேர்த் லூயிஸ் முறைமைப் படி யாழ்ப்பாணம் அணியின் வெற்றிக்கு 75 ஓட்டங்களே போதும் என்ற நிலை இருந்தது. இதனால், யாழ்ப்பாணம் அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் அவிஷ்க பெர்னாண்டோ 21 ஓட்டங்களையும் துனித் வெல்லாலகே ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய கண்டி பல்கன்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பதும் நிசங்க ஓட்டங்கள், கமிந்து மெண்டிஸ் 26 ஓட்டங்கள், நஜிபுல்லா ஸத்ரான் 22 ஓட்டங்கள் சாமீக கருணாரட்ன ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

யாழ்ப்பாணம் அணியின் பந்துவீச்சில் வியாஸ்காந்த், மஹீஷ் தீக்ஷன ஆகியோர் கண்டி அணிக்கு நெருக்கடி கொடுத்தனர். வியாஸ்காந்த் 3 விக்கெட்களையும் மஹீஷ் தீக்ஷன 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

வியாஸ்காந்த் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஐ)

## இந்தியாவுடனான டெஸ்ட்; சுருண்டது பங்களாதேஷ்!

மிர்பூர், டிசெ. 23

இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்டில் பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸில் 227 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்துள்ளது.

பங்களாதேஷுக்கு எதிரான முதல் டெஸ்டை 188 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது இந்திய அணி. இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட், மிர்பூரில் நேற்று தொடங்கியது. நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் ஷகீப் அல் ஹசன் முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

ஆடுகளத்தில் புற்கள் நிறைய இருந்ததால் சிராஜ், உமேஷ் யாதவ், உனாட்கட் என மூன்று வேகப்பந்து வீச்சாளர்களை களமிறக்கியது இந்தியா. இதனால் கடந்த ஆட்டத்தில் ஆட்டநாயகனாக தெரிவான குல்தீப் யாதவ் இம்முறை நீக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் அணி முதல் நாள் உணவு இடைவேளையின்போது 28 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 82 ஓட்டங்கள் எடுத்தது.




பல வருடங்களுக்கு பிறகு தனது இரண்டாவது டெஸ்டை விளையாடும் உனாட்கட், முதல் டெஸ்ட் விக்கெட்டை எடுத்தார். சகீர் ஹசனின் விக்கெட்டை உனாட்கட்டும் ஷான்டோ விக்கெட்டை அஸ்வினும் எடுத்தார்கள்.

உணவு இடைவேளைக்குப் பிறகு உமேஷ் யாதவ் வீசிய முதல் பந்திலேயே ஷகில் அல் ஹசன் 16 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். 5 பௌண்ட்ரிகள் அடித்த முஷ்பிகுர் ரஹிம் 26 ஓட்டங்களில் உனாட்கட் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். ஒரு சிக்ஸர், 2 பௌண்ட்ரிகளுடன் விரைவாக 25 ஓட்டங்கள் சேர்த்த லிட்டன் தாஸை அஸ்வின் வீழ்த்தினார்.

பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸில் தேநீர் இடைவேளையின்போது 5 விக்கெட் இழப்புக்கு 184 ஓட்டங்கள் எடுத்தது. மொமினுல் ஹக் 65, மெஹிதி ஹசன் 4 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள். உணவு இடைவேளைக்கு பிறகு வீசப்பட்ட 29 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 102 ஓட்டங்கள் எடுத்துள்ளது வங்கதேசம்.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு இந்திய அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ளத் தடுமாறினார்கள் பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர்கள். மெஹிதியை 15 ஓட்டங்களிலும் நுருல் ஹசனை 6 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்கச் செய்தார் உமேஷ் யாதவ். அடுத்து வந்த டஸ்கின் அஹமத்தை ஓர் ஓட்டம் வெளியேற்றினார். கடைசி இரு விக்கெட்களையும் ஒரே ஓவரில் வீழ்த்தினார் அஸ்வின். இந்தியப் பந்துவீச்சைத் திறமையாக எதிர்கொண்ட மொமினுல் ஹக் 84 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸில் 73.5 ஓவர்களில் 227 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. கடைசி 5 விக்கெட்களை 14 ஓட்டங்களுக்கு வீழ்த்தியது இந்தியா. உமேஷ் யாதவ், அஸ்வின் தலா 4 விக்கெட்களும் உனாட்கட் 2 விக்கெட்களும் எடுத்தார்கள்.

முதல் நாள் முடிவில் இந்திய அணி, 8 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஷுப்மன் கில் 14, ராகுல் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)

## 12 ஆண்டுகளின் பின்னர் உனாட்கட் டெஸ்ட் அறிமுகம்

டாக்கா, டிசெ. 23

டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது முதல் விக்கெட்டை கைப்பற்றியுள்ளார் இந்திய அணியின் பந்துவீச்சாளர் ஜெயதேவ் உனாட்கட். சுமார் 12 ஆண்டு கால காத்திருப்புக்கு பின்னர் இந்திய அணியில் விளையாடும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. கடந்த 2010இல் அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுக வீரராக களம் கண்டார்.

இந்திய அணியில் மிக இளம் வயதில் விளையாடும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

2010இல் டெஸ்ட் கிரிக்கெட் அறிமுகம், 2013இல் ஒருநாள் மற்றும் 2016இல் இருபது - 20 கிரிக்கெட் அறிமுகம் அவருக்கு அமைந்தது. இடது கை பந்துவீச்சாளரான அவருக்கு வாய்ப்புகள் தொடர்ச்சியாக கிடைக்கவில்லை.

96 முதல் தர போட்டிகளில் விளையாடி 353 விக்கெட்களை கைப்பற்றி உள்ளார். அதேபோல 116 லிஸ்ட் ஏ போட்டிகளில் விளையாடி 168 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மீண்டும் அரிசி இறக்குமதி செய்யும் தேவை ஏற்படாது!

## அமைச்சர் அமரவீர நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 23

அரிசி இறக்குமதியை மீண்டும் ஆரம்பிக்கவேண்டிய தேவை ஏற்படாதென தாம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இம்முறை பெரும்போகத்தில் சுமார் 08 இலட்சம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கையை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவற்றில் 7 இலட்சத்து 48 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப் பரப்பில் தற்போது செய்கை நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார். (அ)



# மின் கட்டணத்தை அதிகரித்தால் முறைப்பாடின்றி தலையிடுவோம்!

## மனித உரிமைகள் ஆணைக்குழு அதிரடி

கொழும்பு, டிசெ.23

**பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால், முறைப்பாடு இன்றி தலையிடத் தயார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இலங்கை மனித உரிமைகள் பேரவையின்பணிப்பாளர்நிஹால் சந்திரசிறி இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே நிலவும் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் ஒடுக்குவதற்கு அரசாங்கத் திற்கோ அல்லது அதன் பங்குதாரர்களுக்கோ உரிமை இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சக்தி அமைச்சு அல்லது இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிடும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# 10 இலட்சம் ரூபாய் பணம், நகை மட்டுவிலில் திருடர் கைவரிசை!

தென்மராட்சி, டிசெ. 23

பட்டப்பகலில் வீட்டின் கதவை உடைத்து நுழைந்த திருடர்கள் 5 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் 5 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட நகைகளை களவாடி சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை தெற்கு மட்டுவிலில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் வேலை நிமித்தம் வெளியில் சென்ற வேளையிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காலையில் சென்ற வீட்டுக்காரர்களில் ஒருவர் முற்பகல் 11 மணியளவில் வீட்டுக்கு வந்தபோதே திருட்டு நடைபெற்றது தெரியவந்துள்ளது.

வீட்டின் கதவை உடைத்து நுழைந்தவர்கள் 5 இலட்சம் ரூபாய் பணம், 5 இலட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள நகைகளை திருடிச் சென்றுள்ளனர் என்று வீட்டின் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

# இலங்கையர்களுக்கு ஜப்பானில் வேலை

கொழும்பு, டிசெ. 23

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஜப்பானில் கார் இருக்கை உற்பத்தித் துறையில் வேலைகளுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பத்தரமுல்லையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமைக் காரியாலயத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு தகுதியான வர்களை பதிவு செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டை, பாடசாலை வெளியேறும் சான்றிதழ், ஜி.சி.ஈ உயர்தர சான்றிதழ் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் ஆகிய வற்றைக் கொண்டு வருமாறும் கோரப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி ரணிலை சந்தித்தார் சீன பிரதித் தூதுவர் ஹு வெய்

கொழும்பு, டிசெ. 23

இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஹு வெய் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் புதன்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் இருதரப்பு மற்றும் பல தரப்பு கடன்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக சீன தூதரகம் தனது ருவிட்டர் கணக்கில் தெரிவித்துள்ளது.

சீன அரசாங்கம் மற்றும் சீன வங்கிகள் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார் என சீன தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)



# கட்டுக்கடங்காத டெங்கு!

கொழும்பு, டிசெ. 23

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் இந்த வாரம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது.

இதுவரையில் 58 வைத்திய அதிகாரி பிரிவுகள், அதிக ஆபத்தான வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த வருடத்தில் 72,903 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த வருடத்தில், இந்த காலப்பகுதியில் பதிவான நோயாளிகளின் எண்ணிக்கையை காட்டிலும், இவ்வருடத்தில் 40,998 நோயாளிகள் அதிகமாக பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.



இந்த மாவட்டங்களில் 14 வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த பிரிவுகளில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை கண்டறிந்து அவற்றை ஒழிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மக்களைக் கோரியுள்ளது. (அ)

# நாளாந்த வாகன விபத்தினால் குறைந்தது 8 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 23

நாடளாவிய ரீதியாக இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற விபத்துக்கள் காரணமாக ஆயிரத்து 971 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸ் போக்குவரத்து தலைமையகத்தின் கல்வி மற்றும் பொது பாதுகாப்பு நிலையக் கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் சேனக கமகே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். நாளாந்தம் வாகன விபத்துக்கள் காரண மாக குறைந்தது 8 பேர் உயிரிழப்பதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# கடலில் மீட்கப்பட்ட அகதிகள் மீரிஹான தடுப்பு முகாமுக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் இருந்து ரோஹிங்கிய அகதிகளை மீரிஹான தடுப்பு முகாமுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்படி நேற்று வியாழக்கிழமை காலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 104 ரோஹிங்கிய அகதிகள் மூன்று பஸ்கள் மூலம் மீரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மியன்மாரில் இருந்து விரட்டப்பட்ட ரோஹிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேசில் அமைந்திருந்த அகதி முகாமில் தங்கியிருந்த சமயம் இந்தோனேசியாவுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் படகு மூலம் சட்ட விரோதமாக பயணித்தபோதே யாழ்ப்பாணம் மருதங்கேணி அருகே நடுக்கடலில் படகு பழுதடைந்து தத்தளித்தனர்.



இவ்வாறு தத்தளித்தவர்கள் 2022 டிசெம்பர் 17ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு டிசெம்பர் 18ஆம் திகதி கடற்படையினரின் படகு மூலம் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு வரப்பட்டு மருத்துவப் பரிசோதனைகளின் பின்னர் அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

சட்டத்துக்கு புறம்பாக இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்ட 104 பேர் மற்றும் அவர்களை சட்டத்துக்கு புறம்பாக நாடு கடத்த முற்பட்ட வலையமைப்புக்கு உதவியவருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் காங்கேசன்துறை பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர்.

டிசெம்பர் 19ஆம் திகதி மாலை 105 பேரும் தடுத்து வைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன்,104 பேரையும் அகதிகளுக்கான ஐ.நா ஆணையகம் பொறுப்பேற்பதாயின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அனுமதி பெற உத்தரவிட்டதுடன் அகதிகள் அனைவரையும் மீரிஹான தடுப்பு முகாமில் தங்க வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன், நாடொன்றுக்கு 104 பேரையும் கடத்த முயற்சித்தவரை 2023 ஜனவரி 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

இந்நிலையிலேயே டிசெம்பர் 19 ஆம் திகதி இரவு 8 மணியளவில் தற்காலிகமாக 105 பேரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்துவரப் பட்டு 104 பேரை மீரிகானவுக்கு அனுப்ப நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

## அரசியலுக்கு....

கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

மேலும், உணவுப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தை வெற்றியடைய செய்வதற்கு, அரசியலுக்கு அப்பால்பட்டு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர்தான் அரசியலில் ஈடுபடவில்லை. வாழ்க்கை சுமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கி நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க அர்ப்பணிப்புடன் தான் செயல்பட்டார் என்றும் தெரிவித்தார்.

மக்கள் இன்று ஒரு குழுவை அன்றி முழு அரசியல் முறைமையையும் நிராகரித்துள்ளனர். ஒன்றிணைந்து செயல்பட்டு நாட்டை கட்டியெழுப்புவதன் மூலமே மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும். விவசாயிகளுக்கு தேவையான உரத்தை வழங்கும் அதே வேளை அடுத்த ஆண்டு பற்றியும் சிந்திக்க வேண்டும். ஏனெனில், இந்த ஆண்டு, பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருக்கின்றோம்.

ஆனால், உக்ரைன் போர் காரணமாக அடுத்த ஆண்டு உலகம் முழுவதும் உணவுப் பற்றாக்குறை ஏற்படலாம். அந்த சவாலை நாம் வெற்றி கொள்ள வேண்டும். நாம் ஆரம்பித்துள்ள இந்த உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை 2023ஆம் ஆண்டு முழுவதும் செயல்படுத்த எதிர்பார்க்கின்றோம். ஏனெனில், இந்த உலகளாவிய நிலைமை காரணமாக உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து வருகிறது. இந்த நிலையில் அபிவிருத்தியடைந்த நாடுகளால் மட்டுமே அவற்றை வாங்க முடியும். அந்தப் பின்னணியில் இந்தச் செயல்பாடுகளை நாம் வெற்றியடையச் செய்ய வேண்டும்.

இன்று இந்தத் திட்டம் கிராம அளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஏதேனும், குறைபாடுகள் இருப்பின் எங்களுக்கு அறிவிக்குமாறு அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறேன் - என்றும் கூறினார். (ஐ)

## தொற்று....

கள் உண்டாகும் வாய்ப்புகள் உள்ளன. ஏற்கனவே மன்னாரில் தோட்டவெளி, மன்னார் நகரம், பேசாலை, போன்ற இடங்களில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே, வீடுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் தண்ணீர் தேங்கி நிற்காமல் பாதுகாக்க வேண்டும். மழை காலங்களில் கொதித்து ஆறிய நீரை பருகுவதன் மூலம் நெருப்புக் காய்ச்சல், சளி, வயிற்றோட்டம் போன்ற பல தொற்று நோய்களில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மேலும், நீர் தேங்கி நிற்கும் இடங்களுக்கு சிறுவர்களை குளியலுக்கு அல்லது விளையாடவோ தண்ணீர் எடுத்து வருவதற்கோ அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். முக்கியமாக காலநிலை அவதானிப்பு நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையங்களின் எச்சரிக்கைகளும் மதிப்பளித்து வீடுகளில் பாதுகாப்பாக இருக்குமாறும் கேட்டுள்ளார்.

## தாமதமாக....

மாக சென்றிருந்தனர். இதனால், கோபமடைந்த தென்கொரிய அதிகாரி அவர்களை கண்டித்தார்.

இதன்போது, பொய்களை சொல்வதும் வாக்குறுதிகளை அளிப்பதும் இலங்கையில் சாதாரண விடயமாகிவிட்டது. அது இலங்கையின் கலாசாரமாகிவிட்டது

கூட்டம் ஒன்றுக்கு அரை மணி நேரம் தாமதமாக செல்வது நல்ல அறிகுறியில்லை. அமைச்சர்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். நிகழ்வுகளுக்கு உரிய நேரத்தில் கலந்துகொள்ள வேண்டும். தென்கொரியாவில் இது இடம்பெற்றிருந்தால் அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பார்கள், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். இவ்வாறான அமைச்சர்களை சந்திப்பதில் அர்த்தமில்லை. சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அந்த சந்திப்பு உரிய நேரத்தில் ஆரம்பமாக வேண்டும். அமைச்சர்களால் அதனை செய்ய முடியாதுவிட்டால் அவர்களை சந்திப்பதில் அர்த்தமில்லை.

பொய்களை சொல்வதும் வாக்குறுதிகளை அளிப்பதும் இலங்கையில் சாதாரண விடயமாகிவிட்டது. அது இலங்கையின் கலாசாரமாகி விட்டது. வெளிநாட்டை சேர்ந்த ஒருவர் இதனை தெரிவிப்பதை கேள்விப்பட்டு இலங்கை மக்கள் வெட்கப்படவேண்டும். இலங்கை மக்கள் தங்கள் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ளாவிட்டால் அவர்களால் வெளிநாட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியாது.

மக்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். அவற்றை நிறைவேற்றுவதை ஒருபோதும் மறக்ககூடாது. அமைச்சர்களும் அவ்வாறே செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்படாத அமைச்சர்களை சந்திப்பதில் அர்த்தமில்லை. மக்கள் பொய்சொல்லக்கூடாது - என்றும் கூறினார். (ஐ)

## மலையகம்....

அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் எம். பி. இது குறித்து மேலும் கூறுகையில்,

இலங்கை இந்திய மலையக தமிழர், இலங்கைக்கு வந்த 1823ஆம் ஆண்டிலிருந்து கடந்த 200 வருடங்களாக இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கி வரும் பங்களிப்பை ஆராய்வு செய்து அங்கீகரிக்க, அமைச்சரவை பத்திரம் மூலம் இலங்கை அரசு அதிகாரபூர்வமாக தீர்மானித்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம்.

இதேவேளை இந்திய வம்சாவளி மலையக தமிழர் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக, வறுமை, உணவின்மை, காணியுரிமை இன்மை, வீட்டுரிமை இன்மை, கல்வியுரிமை இன்மை ஆகிய கொடுமைகளை எதிர்கொண்டு, இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாக இல்லாமல், பெருந்தோட்டங்களிலும், தொழில் தேடி மாநகரங்களிலும், வாழ்கிறார்கள்.

இந்த மக்களின் பின்தங்கிய குறை வளர்ச்சியை ஆய்வு செய்து அவர்கள் இதுவரை காலமும் இழந்த வளர்ச்சிகளை எட்டிபிடிக்கும் நோக்கில், அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள, மீளுறுதி நடவடிக்கைகளை அரசாங்கம் எதிர்வரும் 200வது ஆண்டு முதல் முன்னெடுக்க ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை கோருகிறோம் - என்றார். (ஐ)

## தனியார்....

கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் இந்தியா புறப்பட்டு சென்றார். இந்த வார இறுதியில் அவர் நாடு திரும்புவார். தனியார் நிறுவனம் ஒன்றிடம் மருந்துகளை கொள்வனவு செய்யவே அவர் அங்கு சென்றார் என்று தகவல்கள் பரவியுள்ள நிலையிலேயே அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அமைச்சர் நாடு திரும்பியதும் இந்த விடயம் குறித்து கேள்வி எழுப்பப்படும். விடயம் உண்மை என்றால் குறிப்பிட்ட இந்திய நிறுவனத்தின் மருந்துகளை கொள்வனவு செய்யத் தெரிவு செய்யப்பட்டது ஏன் என்பது தொடர்பில் விளக்கமளிக்குமாறு அவரிடம் கோரவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், அமைச்சர் ஏன் இந்தியா சென்றுள்ளார். அந்தத் தனியார் நிறுவனத்துடன் அவர் என்ன செய்கிறார் என்பது பற்றி உடனடி அறிக்கையை வெளியிட வேண்டும் என்றும் சுகாதார திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள் கூறியுள்ளனர். (ஐ)

# மடிச்சுக்கட்டி நோய் தாக்கத்தால் 782 ஏக்கர் நெல் செய்கை பாதிப்பு!

வவுனியா, டிசெ. 23

வவுனியா மாவட்டத்தில் மடிச்சுக்கட்டி நோய் தாக்கம் காரணமாக 782 ஏக்கர் நெல் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையின் நெல் மற்றும் பயிர் பாதுகாப்பு பாடவிதான உத்தியோகத்தர் கு. கஜரூபன் தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

நெல் செய்கை மாவட்டங்களில் வவுனியா மாவட்டமும் முன்னிலை வகிக்கின்றது. இம்முறை கால போகத்தில் 23 ஆயிரத்து 186 ஹெக்ரெயர் நெற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட போதும் ஆரம்பத்தில் போதியளவு மழை கிடைக்காமையால் 21 ஆயிரத்து 832 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெல் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் ஆரம்பத்தில் குறைவான மழை வீழ்ச்சி கிடைத்ததுடன், தற்போது அதிகளவிலான மழை வீழ்ச்சி கிடைத்து வருகின்றது. வானிலை மாற்றத்தால் குறைந்தளவிலான பகல் காலமான - இருளான அதிக ஈரப்பதன் காலநிலை நிலவி வருவதால் நெல் பயிர்களுக்கு இலை மடிச்சுக்கட்டி நோய் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக விசாயிகள் பலர் பாதிப்படைந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், பாவற்குளம், பம்பைமடு, மடுகந்தை, மகாகச்சகொடி, நெடுங்கேணி, கனகராயன்குளம், ஓமந்தை உள்ளிட்ட பகுதிகளில் 782 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த நோயின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. இது 25 - 30 வீதமான தாக்கமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

எனினும், இது தொடர்பில் பொருத்தமான கிருமி நாசினிகளை பயன்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அதிகரித்த உழவு கூலி, களை நாசினி மற்றும் கிருமிநாசினி என்பவற்றின் அதிகரித்த விலை என பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நெல் செய்கையில் ஈடுபட்டுள்ள நிலையில் தற்போது மடிச்சுக்கட்டி நோய் தாக்கத்தால் தாம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# மீன் வலையில் மறைத்து வைத்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டன!



யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உதயபுரம் பகுதியில் மீன்பிடி வலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருட்கள் நேற்று வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டது.

பயன்படுத்தப்படாத மீன் பிடி வலைகளில் வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை புலனாய்வு பிரிவுக்கு தகவல் கிடைக்கப்பெற்றது.

இந்நிலையில், அதிரடிப் படையின் உதவியுடன் குறித்த வெடி பொருட்கள் அகற்றப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

கைப்பற்றப்பட்ட வெடி பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கடற்றொழிலாளி....

அவரின் கழுத்தில் கத்தியை வைத்து சிப்பாய் மிரட்டியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அப்பகுதி கிராம சேவையாளருக்கும் கடற்றொழிலாளர் சங்கத்துக்கும் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஐ. எம். எவ்.....

கடிக்குள் சிக்குண்ட இலங்கை சர்வதேச நாணய நிதிய கடனை நாடியது. இந்த ஆண்டு இறுதிக்குள் கடனைப் பெற வாய்ப்புள்ளதாக முன்னர் கூறப்பட்டது. ஆனால், கடன் மறுசீரமைப்பு முறை காரணமாக அது 2023இற்கு பின்சென்றது.

நெருக்கடிகள் காரணமாக இலங்கை கடந்த ஆண்டு ஏப்ரலில் இறையாண்மை கடனை திருப்பி செலுத்தாது என்று அறிவித்தது. அந்நிய செலாவணி - டொலர் கையிருப்பில் இல்லாததாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. எனினும், விரைவில் இரு தரப்பு கடன் வழங்குநர்களிடம் இருந்து உறுதி மொழியை பெற்று நாணய நிதியத்தின் கடனைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## கூட்டமைப்பு....

தலைமையிலான அரச குழுவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேசினர்.

முறையான அழைப்பின்றி - திடீர் ஏற்பாடாக இடம்பெறும் இந்த சந்திப்பை ஒத்தி வைக்கவேண்டும். சுமந்திரன் எம். பி. ஊடாக எமக்கு அழைப்பு விடுப்பதை ஏற்க முடியாது என்று தெரிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்த நிலையில், இந்தக் கடிதத்துக்கு விக்னேஸ்வரன் எம். பிக்கு ஜனாதிபதி செயலகம் பதில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில், "இந்த சந்திப்பு உத்தியோகபூர்வமற்றது. எதிர்காலத்தில், அடுத்த சந்திப்புகள் ஒழுங்கு செய்யப்படும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# போதைப்பொருள் பாவனையால் 5 ஆயிரம் மாணவர்கள் சிறையில்!

கொழும்பு, டிசெ. 23

**போதைப்பொருள் பாவனைக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரமாக அதிகரித்துள்ளது.**

**சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் மேலதிக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்தன ஏகநாயக்க இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2015ஆம் ஆண்டு பாடசாலைக்குச் செல்லாத சுமார் 600 பேர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இது 2021 இல் 190 ஆகக் குறைந்துள்ளது.

இருப்பினும், சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2015 இல் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2,000 ஆக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டு அது 5000 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், 2020ஆம் ஆண்டு 22 பட்டதாரிகள் போதைப்பொருள் பயன்படுத்தியதற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 23

மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரை கடற்றொழிலில் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் தென் மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 55 தொடக்கம் 65 கிலோ மீற்றர் வேகத்தில் அதிகரித்துள்ளமையே இதற்கு காரணம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# டிசெம்பர் 26 விசேட விடுமுறை

கொழும்பு, டிசெ. 23

எதிர்வரும் 26ஆம் திகதி, விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்தன இதனை அறிவித்ததார் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வருடம் நத்தார் பண்டிகை ஞாயிற்றுக்கிழமையில் வருகின்றமையால், அதற்கடுத்த நாள் திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உள்ளூர் தேயிலை விலை குறைந்தது

கொழும்பு, டிசெ. 23

உள்ளூர் தேயிலையின் விலை குறைந்துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

சில தரம் குறைந்த தேயிலை பொருட்களை நிராகரித்தமையே இதற்கான காரணம் என அதன் தலைவர் நிராஜ் டி மெல் தெரிவித்துள்ளார். (அ)




# விளையாட்டு போட்டியில் அதிக பதக்கம் பெற்ற யாழ். சிறை உத்தியோகத்தர்களுக்கு கௌரவம்




யாழ்ப்பாணம், டிசெ. 23

அரச திணைக்களங்களுக்கு இடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி சிறைச்சாலை திணைக்களத்துக்காக அதிக பதக்கங்களை பெற்ற வீரர்கள் யாழ்ப்பாணத்தில் கௌரவிக்கப்பட்டனர்.

வெற்றி பெற்றவர்களை வவேற்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் உத்தியோகத்தர்களால் நடைபெற்றது.

யாழ். சிறைச்சாலையின் வீரர்களான யூட் பீரிஸ் உயரம் பாய்தல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், ரி.சி.அன்றூ குண்டு போடுதல் போட்டியில் வெள்ளி பதக்கத்தையும் தட்டெறிதலில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

எஸ்.சியானியஸ் ஈட்டி எறிதல் போட்டியில் தங்க பதக்கத்தையும், எச்.ஜே.அபேயரத்தன 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், ஜே.றொகான் 4×400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் வெண்கல பதக்கத்தையும் 4×100 அஞ்சல் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் என மொத்தமாக 7 பதக்கங்களை பெற்றனர். (அ)

# இலங்கைத் தமிழ் இலக்கிய விழா மதுரையில் நேற்று ஆரம்பமானது





சென்னை, டிசெ. 23

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் தமிழ் நாடு அரசின் உலகத் தமிழ் சங்கம் மதுரையும் இணைந்து நடத்தும் தமிழ் வளர்ச்சியில் இலங்கை தமிழரின் பங்களிப்பு என்ற பொருளில் அமைந்த பன்னாட்டு கருத்தரங்கம் நேற்று வியாழக்கிழமை மதுரையில் ஆரம்பமாகியது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற தொடக்க அமர்வில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் முனைவர் ப. அன்புச்செழியனிடம் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க வெளியீடான சங்கப்பேழை என்ற இதழ் வழங்கப்பட்டது.

தொடக்க நிகழ்வைத் தொடர்ந்து நான்கு ஆய்வு அரங்குகள் இடம்பெற்றன. மாலை கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி தலைமையில் கவியரங்கம் இடம்பெற்றது.

இன்று இடம்பெறும் நிறைவு நிகழ்ச்சியில் நான்கு அமர்வுகளாக ஆய்வரங்கு இடம்பெறுவதோடு பட்டிமன்றம் ராஜா தலைமையில் சிறப்பு பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பேராசிரியர் சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன், கவிஞர் குறஜீவன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான ஆய்வு மாணவர்களும் ஆர்வலர்களும் நிகழ்வில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# அச்சுவேலியில் வீடொன்றின்மீது அடாவடி கும்பலொன்று தாக்குதல்!

யாழ்ப்பாணம், டிசெ. 23

அச்சுவேலியில் வீடொன்றுக்குள் நுழைந்த அடாவடி குழு ஒன்று யன்னல் கண்டாடிகள், காரின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளளது.

அச்சுவேலி - தென்மூலை - கைத்தொழில் பேட்டை பிரதான வீதியிள்ள வீடொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வாள்கம் சகிதம் வந்த ஆறு பேர் கொண்ட குழு வீட்டின் முற்றத்தில் நின்ற காரின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியது. பின்னர், வீட்டின் யன்னல் கண்ணாடிகள் மற்றும் மீன் தொட்டிகள் என்பனவற்றையும அடித்து உடைத்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-03)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.